45

# ஜகன் மோகினி

துன்முகி ஸ்ரீ வைகாசி மீ 1—6—56 அணா நான்கு

# கலை பேசுகிறது

"ஸைரக்ராஷி"

மலர் 33 இதழ் 6

OFFICE OF THE REGISTRAR OF



45
3-56

3L
ZZ211 A2257
A 56'38.6.
183203




# ஜகன்மோகினி




ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.

—வீரராகவ கவி


ஜூன் 1956. மலர் 33, இதழ் 6. துன்முகி ௵ வைகாசி


## க்ஷேமலாபங்கள்

வாசகப் பெரியோர்களுக்கு, வணக்கம். உபயகுசலம்.

ஸ்ரீ ராஜாஜி திரட்டிக் கொடுக்கும் கீதாம்ருதத்தை அநேக அன்பர்கள், "ராஜாஜியின் கீதாம்ருதம் எங்கள் ஆத்ம ரக்ஷணத்திற்கு அரும் விருந்தாக இருக்கிறது" என்றும் "வாழ்க்கைப்பிணிக்கு அரும் மருந்து" என்றும் "எங்கள் பாக்யமே ராஜாஜியின் கீதாம்ருதம் கிடைக்கப் பெற்றோம்" என்றும் தம்முடைய இதயத்தைத் திறந்து காட்டி எழுதி இருக்கின்றார்கள்.

இன்னும் சிலர், மாதந்தோறும் வெளிவரும் நாடகத்தையும், சென்ற இதழில் தொடங்கியுள்ள வை. மு. ஸ்ரீயின் தீபஸ்தம்பத்தையும் பாராட்டி, மகிழ்ச்சியோடு வரவேற்று எழுதியுள்ளார்கள். அந்த அன்பர்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விதழிலிருந்து கலை பேசுகிறது என்ற புதிய பத்தி ஆரம்பித்திருப்பதை நேயர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

—வை. மு. வி.


(4-ம் பக்கத் தொடர்ச்சி)


பூர்வீக ஹிந்துமத சாஸ்திரானுஷ்டான முறைகளில், ஸ்திரீகளுக்கே சகல பிராதான்யமும், சுதந்தரமும், உயர்வும் பெருமையும் கொடுத்துள்ளதை எவரும் ஆராய்ந்தறிந்து அமுலுக்குக் கொண்டுவர ஆசைப்படவில்லையே!—. காலம் மாறியே போச்சுதான்!—.

**சமத்துவமென்ற கானல்நீர்!!!**

ஆண் பெண் சமத்வ சட்டங்கள் பிறப்பிக்கப்படுகின்றன. பதவியும் பணமுந்தான் இவர்கள் கைப்பட்டு, மேல் கீழாக ஓடியாடி, ஆண்பெண் நிலை தடுமாறச்செய்து, சமத்துவமென்ற கானல்நீர் காட்டக்கூடும். ஆனால், ஆண் பெண்களது சரீர அமைப்பில், சர்வேச்வரன் ஏற்படுத்திய பரஸ்பர கவர்ச்சிகாரணமான அங்கபேதங்களையகற்றிச் சமத்வமேற்படுத்த, எந்தச் சட்டசபையாளர்களாலுங் கூடுமா?—எந்தச்சட்டதிட்டங்களாலுந்தான் ஆகுமா?—அப்படிக்கான அங்க பேதங்களில்லாத சமூக ஸ்தாபனமுண்டாக்கக்கூடுமானால், அதுதான் சமதர்ம சமூகமாகக் கூடும்.—அதன்பின், சமூக விருத்தியேது?—ரஸாயன முறையில்தான் குழந்தைகள் சிருஷ்டிக்கப்பட வேண்டி வரும்!—அந்தக் காலமும் வருமோ என்னவோ!—காலம் மாறித்தான் போச்சு!

'மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து'—

ஸ்ரீமான். வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார்

# காலம் மாறிப் போச்சு!

> 'அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
> பண்புடைமை யென்னும் வழக்கு'.

**காலம், மாறிப்போச்சு. காலம்—, மாறிப் போச்சு?— காலம்—, மாறிப்—போச்சு!**—விளங்கியதா?—இது, சினிமா விளம்பரமல்ல—. ஹிந்து சமூக வாழ்க்கையின் நிகழ்கால விளக்கமும், வருங்கால சூசகமுந்தான்.—காலம், மாறியே போச்சு!—

**குலப் பிறப்பையும், குடிப் பிறப்பையும் பழிக்கும் காலம்.**

குடிப்பிறப்பைப் பற்றியே குறள் முழுதும் சிறப்பித்துப் பேசுகிருர் நாயனுர்—. ஆனுல், இக்காலத்திலோ, அதே குறளைப் பாடுந் தமிழர், குலப் பிறப்பையும், குடிப் பிறப்பையுந்தான் பழித்துப் போக்கிடப் பிரசாரங்கள் பலமாக நடத்துகின்றனர்! காலம்,மாறித்தான் போச்சு!—

**இது அன்போ? பண்போ?**

> 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனுமது'—.

இன்று, புத்தஜயந்தி விழா, இந்தியா முழுதும்கொண்டாடப்பட்டது. அன்புருவைப் பற்றி, என்புருகப் பேசியுள்ளார்கள், ஈ. வே. ரா. உள்பட்ட சகல கக்ஷிப் பிரமுகர்களும். சென்னைக் கவர்னரும், தன் பேச்சுரை மத்தியில், கூட்டத்தில் பிரவேசித்த திரு. அண்ணுதுரை வருகையுண்டாக்கிய கலவரத்தையும் பொறுத்து, கூட்ட நிர்வாகிகள் வேண்டுகோளுக்கிணங்கி, தன் பேச்சுரையை முடித்திட முடியாது, திரு அண்ணுதுரையவர்களைப் பேசச் சொல்லி, தான் உட்கார்ந்து கேட்டு வந்தாராம்!—. இது, அன்போ?—பண்போ? காலம், மாறிப் போச்சுதான்—.

**வேர்ப்புழுக்களை அழுக்க விருக்ஷத்தைப் பொசுக்குவதா!**

சரித்திர ஆராய்ச்சிப்படிக்கு, ஹிந்து சமூகத்திடை பரவிப் பாழாக்கி வரும் குலப் பெருமை என்ற வேர்ப் புழுவைப் பிடுங்கி யெறிந்தே புத்தர் தனது அன்பு மதஸ்தாபனம் செய்தாராம்!—. அனுல்!—அதே சரித்திர ஆராய்ச்சி, இதே புத்தமதம், சீக்கிரத்திலேயே வரண்டு, ஆதி வேதமதம் செழித்தோங்கவே வழி விடலாயிற்று என்று தெளிவுறத் தெரிவிப்பதை மட்டும், இவ்வாராய்ச்சியாளர் ஏனோ கவனிக்கவில்லை?—விருக்ஷங்களை அழித்திட, வேர்ப்புழுக்கள் வந்து சேருவதுபோல, எந்தச் சமூகத்திலும், பலவித வேர்ப்புழுக்கள் வந்து சேர்ந்து கொண்டேதானிருக்கும். அதுகளைக்கண்டு களைந்தெறிய வழிதேடாது, வேர்ப்புழுக்களை அழிக்க, விருக்ஷத்தையே பொசுக்கி

விடப் பிரயாசைகொள்ளும் மதியூகர்களைப்பற்றி இதுவரை கேள்விப்பட்டதில்லை—. காலம், மாறித்தான் போச்சு.—

**தாய்ப்பால், பசுவின்பால் போய் புட்டிப்பால் நாகரீகம்.**

ஹிந்து சமூகத் தாய்மார்கள், தாம் பெற்ற குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டி வளர்த்த காலம் மாறி, பசும்பாலாவது ஊட்டி வளர்த்த காலம் இருந்தது—. இப்பொழுதோ, அதுவும் மாறி, புட்டிப்பால் கொடுத்து வளர்ப்பதே நாகரீகமும், ஆரோக்ய முறையுமாகிவிட்டது. இன்றைய சிசுக்கள், தமது தாய்ப்பால் அருந்துவதுதான், பல ரோக காரணங்களுக்கு ஆஸ்பதமான அசங்கியமென நிர்ணயிக்கப் பட்டுள்ளது காலம், மாறித்தானே போச்சு!—

அன்பும், அறனும், பண்புடன் பயன் தர வளர்த்த நமது புராதன ஹிந்து சமூகத்தையே உலக வழிகாட்டி என உயர்த்திப் புகழ்ந்து, பல இதர மதங்களும் இன்று அதையே நாடித் தேடி ஆராய்ந்திட வந்துள. இவ்வுயர்வின் அடிப்படை ஆதாரங்கள், நமது முன்னோர், முன்னறிவுடன் நிர்ணயித்து வைத்துப் போன தாய்மையின் நேர்மையும், தாய்ப்பாலின் தூய்மையுமே—. சிந்தையில் அன்பும், செயலில் அறனும் ஒருவனுக்குப் புகுந்து ஊறுவது. அறன் வழிவந்த அன்புக் களஞ்சியமாகிய தன் தாயின் பாலை அவன் பருகுங் காரணமே. போலிப் பால்கள் ஊட்டி வளர்க்கப்படும் மக்கட் சமூகத்திடை, போலிப் பண்பும், போலி அன்பும் அறனுந்தானே இடம் பெறக் கூடும்.— காலம், மாறிப் போச்சுதான்!

**ஹிந்து சமூகம் போய் சமதர்ம சமூகமா?**

கற்பும் தாய்மையுமே சமூக அடிப்படையாகக்கொண்டு வளர்ந்த ஹிந்துமத சமூகத்தில், இச்சா விவாகமே இல்லற முறையாகவும், பணமும் பதவியும் தேடியலைவதே ஸ்திரீகள் உரிமையாகவும், விவாக சட்டங்களும், சொத்துரிமைச் சட்டங்களும் வந்த பிறகு, நம் நாட்டில், இனி, கற்பு ஏது?— தாய்மை ஏது?— பெண்மையுந்தான் ஏது?— ஹிந்து மதாசாரானுஷ்டானங்களனைத்துந்தான், மனப் பிராந்தி காரணமான மதியீனங்களென (Fantastic Nonsense) ராஜ்ய நிர்வாகிகள் ஆஞ்ஞாபித்து விட்டனரே. நம்மையாண்ட அந்நிய மதஸ்தர்கள், தமது கார்யானுகூலார்த்தம், நமது சமூகத்தைச் சிதைத்துச் சின்னபின்னப் படுத்திப் பிரித்து வைப்பதில் மட்டுந்தான் கண்ணுங் கருத்துங் கொண்டிருந்தார்கள்!—அவர்களையகற்றிச் சுயராஜ்யம் பெற்ற பின்னர், நமது குடியரசுத் தலைவர்களோ, ஹிந்து சமூகமென்ற பெயரும் சின்னமுமே இனிக் காணப்படாது போக்கி, அதனிடத்தில், சமதர்ம சமூகமென்றதோர் புது ஸ்தாபன நிர்

183203

மாண முயற்சிப் பிரசாரங்களை நடத்தி வருகிருர்கள் !—இதன் மர்மந்தான் விளங்கவில்லை.—இதர மதஸ்தர்களெவரும், தத்தம் வேதங்களையோ, மதானுஷ்டானகிரியைகளையோ, மனப்பிராந்தி காரணமான மதியீனங்களெனஅவமதித்துத் தம்மைக் கிருஸ்தவ சமூகத்தார்களென்ருே, முகம்மதிய சமூகத்தார்களென்ருே சொல்லிக்கொள்ள வெட்கப்படவில்லையே?— ஆனல், ஹிந்து சமூக மதாசாரங்கள் மட்டும் அவமதிப்பிற்குரியனவென, நமது ஹிந்து சமூகத் தலைவர்களுக்கும், நாம் தேர்ந்தனுப்பிய நமது ஹிந்து சமூகப் பிரதிநிதிகளாகிய சட்டசபை அங்கத்தினர்களுக்கும், இன்று ஞாளுேதயமாகியுள்ளதுதான் அத்யாச்சர்யமாய்க் காண்கின்றது ! காலம், மாறியே போச்சு !—

***அறிவின் ஆராய்ச்சியா? காலத்தின் கோளாரு?***

குலப் பெருமையும், மதானுஷ்டானபேத காரணமான வர்ணுச்ரம பேதங்களும், இதர மதஸ்தர்களிடை இன்றும் வளர்ந்தோங்கி விளங்கவில்லையா?—வேற்றுமைதான் ஒற்றுமைக்கு அடிப்படை என்பதுதானே சாஸ்திரஞானமும், விஞ்ஞான ஞானமும், உலகானுபவ ஞானமுமாவது—. வேற்றுமையற்ற சமதர்ம சமூகத்தில், ஒவ்வொருவரும் பல்லக்கேறுபவர்களாக விளங்கப் போகிருர்களோ?—இல்லை, பல்லக்கு தூக்கும் தொண்டர்களாகவே துலங்கப் போகிருர்களோ?—ஏறுபவர்களாகிவிட்டால், தூக்குபவர் யார்?—தூக்குபவராகிவிட்டால், ஏறுபவர் எவர் ?—அந்தச் சமதர்ம சமூகத்திலும், ஓர்வித ஏற்றத் தாழ்வு காரணமான சமூக பாகுபாடு இருந்துதானே தீரவேண்டும்? அப்படியிருக்க, தீர்க்காலோசனையுடன், நமது மூதாதைகள், முன்னறிந்து வகுத்துள்ள ஹிந்து சமூக பாகுபாட்டையழித்து, புதியதோர் சமூக ஸ்தாபனஞ் செய்திடக் கனக் காண்பது, அறிவின் ஆராய்ச்சியா ?— காலத்தின் கோளாரு ?—காலம், மாறிப் போச்சுதான் !—

***மந்திரம் ஜெபித்து மழை வேண்டுகிருர்கள் !***

மந்திரம் ஜெபித்து மழை வேண்டுகிருர்கள், இன்றைய சமதர்ம சமூகஸ்தாபன முயற்சியாளர்களும்.—மந்திரம் என்ருலே, அறியப்படாததோர் அபூர்வ சக்தியை வசப்படுத்தி, வேண்டியதைப் பெற்றிடக் கையாளப்படும் ஓர் மர்மம் என்பதுதானே தெளிவு !—.அந்தச் சக்தி எது என்பதையறிந்து, அதை வசப்படுத்திச் சமூக நலன் கோரிப் பெறவல்ல மந்திரங்களைத் தெரிந்து, அம்மந்திரங்களை முறைப்படி ஜெபித்து, சமூக நலன் நாடுபவரைத்தானே நம் முன்னேர், பிரம்ம சக்தியறிந்து வசப்படுத்தவல்ல பிராம்மணர் என்றனர்—.இவர்களது பிரம்மஞான அறிவுதானே இன்று, ஹிந்து மதத்தை எம்மதத்திலுஞ் சிறந்த விஞ்ஞான மதமும், சர்வசம்மத மதமுமாக ஆக்கி

விளக்குவது!—இந்த ஞானங்கொண்டோரையே சமூகத்தி லிராது செய்து, புதியதோர் சமதர்மசமூக ஸ்தாபனமேற் படுவதால், அச்சமூகத்திற்குத்தான் பெருமையா?—.நன் மையா?—.காலம் மாறிப் போச்சு—.

**கடமை மறந்த உரிமைப் பேய் உலாவுகிறது!!**

ஈச்வர சிருஷ்டியே, ஆண், பெண்என்ற அடிப்படைப் பேதத்தைக் கொண்டுதானே சமூக வளர்ச்சி யேற்படுத்தி யுள்ளது. அந்த ஈச்வர ஞானந்தேடும் மதம், ஹிந்து மதம் ஒன்றே யன்றோ!. இஷ்டதேவதாபூஜைக் கிடந்தரும் பரந்த, சர்வசம்மத, சமதர்மசமூக மதம், நமது புராதன ஹிந்துமதமே—.ஆனல்!—இன்றோ!—ஈச்வரன் வகுத்துள்ள ஆண்பெண்என்ற இந்த அடிப்படைபேதத்தையுமே போக் கிச்சமத்வ சமூக ஸ்தாபனஞ் செய்திட, நமது ஹிந்து சமூகத் தலைவர்களும், விஞ்ஞானிகளும், அரசியல் ஞானிகளும் வெகுவெகு சிரமப்பட்டு சட்டதிட்டங்கள் நிறுவி வருகின் றனர். ஆண்களோடு பெண்களும் சமத்வங்கொண் டாடவே ஹிந்து விவாக சட்டமும், சொத்துரிமைச் சட்ட மும் வந்துவிட்டன. கடமைமறந்த உரிமைப்பேய் உலவ வாரம்பித்துவிட்டது ஹிந்து சமூகத்திடை!—. சேவையும் க்ஷேமலாபமும் வெறும் பேச்சளவேயான சுய லாபக்யாதி ஹேதுவான பிரசாரக் கருவிகளாக விளங்குகின்றன. 'குடும்பஸ்திரீ' என்பதை ஓர் பெரும் புகழாகப் பாராட் டிய ஹிந்து சமூகப் பெண்கள், இனிக் 'குடும்பஸ்திரீ என்று சுட்டிக்காட்டப்படுவதையே ஓர் அவமதிப்பாகக் கொள்ளும் காலம் வந்துவிட்டது'— சிந்தனைத்துறையில் தூங்கிக்கிடப் பவர்களைத் தட்டியெழுப்பவே சொத்துரிமைச்சட்டம் பிறப் பித்திருக்கிறோம்,' என்று வீரகர்ஜனை செய்கிறார் நேரு—. ஆனல், திரிவேதியவர்களோ, 'ஹிந்து சமுதாயமென்பதற் குக் கொடுக்கப்படும் கடைசி உதை இந்தச் சொத்துரிமைச் சட்டம்—.நியாயவாதிகளது வாத அரங்கம், என்கிறார் இதை. தேஷ்பாண்டே, 'இது, ஹிந்து ஸ்திரீகள் சொத்து பெற உதவும் சட்டமல்ல. நியாயவாதிகள் சொத்துபெற நிறுவப்படும் சட்டம்'—,என்று சொல்கிறார்.—'ஹிந்துசமூக அமைப்பில், பெண்மையென்பது, பண்டைக்காலத்திய சரக்காகிவிட்டது....முன்னேறுங் காலத்தியதாயில்லை.... பெண்களது பொருளாதாரச் சுதந்தரமே இன்று நாம் தேடித்தரவேண்டும்....ஆகவே, பல்லாயிர முன்னதான வாழ்க்கை முறையை மறந்துவிடுங்கள்,' என்று பெண்கள் சமத்வஉரிமை வாதசிரேஷ்டரான நேருஜி, புத்திமதி கூறிவிட்டார். 'கடந்தது மாயம் என்று எண்ணுதீர்கள்.— கடந்ததைக்கொண்டு, வரப்போவதை வகுத்து வாழுங்கள்,' என்று, இதை எதிர்த்து எச்சரிக்கிறார் நந்தலால் சர்மா. பெண்கள் சமத்வம் தேடுகிறார்களாம் இவ் வாதிகள்! நமது

(தொடர்ச்சி உள் ராப்பர்)

# பகவத்கீதைக் குறிப்புகள்

## ஸ்ரீ ராஜாஜி

### மூன்றாவது அத்தியாயம்

**சுலோகம் : 1-2**

சிஷ்யன் கேட்கிறான்: "ஞானம் பெற்று சம நிலை அடைவதுதான் நல்லவழி என்பது உம்முடைய உபதேசம்; அப்படியானால் ஏன் என்னை இந்தக் கோரமான யுத்தத்தை நடத்தச் சொல்லுகிறீர்? இது க்ஷத்திரியனுடைய கடமை, நீ செய்யத்தான் வேண்டும் என்று ஏன் சொல்லுகிறீர்?" என்று.

அர்ஜுனன் கேட்ட கேள்விக்கு பகவான் சொல்லுகிறான் :

**சுலோ : 3-9**

ஆதிகாலத்திலிருந்து இரண்டு மார்க்கங்கள் மக்களுக்கு உபதேசித்துவரப்பட்டிருக்கின்றன. ஒன்று ஞானத்தை அடைந்து ஆண்டவனைக் காண்பது. மற்றொன்று கர்மயோகம். கர்மங்கள் செய்ய மாட்டேன் என்று சொல்லிச் செய்யவேண்டியதைச் செய்யாமலிருப்பதினால் ஒருவன் கர்மத்தை விட்டவன் ஆகமாட்டான். கர்மங்களை நீக்கிவிட்டு சந்நியாசியாகி விடுவேன்; சித்தியடைவேன் என்று யாராவது எண்ணினால் அது மடமை. தேகத்தில் உயிர் உள்ள வரையில், செயலற்றுக் கிடப்பது முடியாத காரியம். பிறப்புடன் ஒருவனுக்கு ஏற்பட்ட குணங்களினால் தூண்டப்பட்டு எவனுமே தன் செயல் செய்துகொண்டேயிருப்பான். தன் வசமின்றித் தன் குணத்துக்கு இயைந்த செயல்களைச் செய்தே தீருவான். வெளிப்பார்வைக்குச் சும்மா இருப்பவன் போலிருந்தாலும் மனத்திற்குள் இந்திரிய விஷயங்களைப்பற்றிச் சிந்தனை நடந்து கொண்டேயிருக்கும். நான் சந்நியாசி என்று ஒருவன் சொல்லிக் கொண்டிருந்தாலும், உள்ளத்தில் பிறவிக் குணங்களினால் உண்டாகும் நினைவுகள் இருந்து கொண்டேயிருந்தால் அவன் பொய் வேஷக்காரனாவான். அவனுக்கு ஏது முக்தி! உறுதியான மனத்தைக் கொண்டு இந்திரியங்களை அடக்கி யாண்டு செய்யவேண்டிய காரியங்களைப் பற்றும்பசையுமின்றி எவன் செய்து கொண்டு போகிறானோ அவனே மேலான வழியைப் பின் பற்றினவன் ஆவான்.

ஆகையால் செய்யவேண்டும் என்று அவனவனுக்கு வகுக்கப்பட்ட காரியங்களை அவனவன் செய்யவேண்டும். துறவு பூண்டு செயலற்று இருப்பேன் என்று முயற்சி செய்வதைவிட நாம் சொல்வதே நல்ல மார்க்கம். செயலற்று ஒருவன் இருந்தால் சரீர யாத்திரை கூட நடைபெறாது. உயிரை நீத்து விட்டால் அல்லவோ ஒன்றும் செய்யாமல் இருக்க முடியும்? எந்தக் காரியத்தையும் செய்யலாம். ஆனால் அதை ஆண்டவனுக்கு அர்ப்பணமாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் அந்தக்காரியம் ஒருவனைக் கர்ப்பத்தில் கட்டுப்படுத்தாது. வேள்வியாகச் செய்யப்படாத காரியங்களே ஒருவனைத் தாழ்த்தும். ஆனபடியால் நான் சொன்ன முறையின்படி செய்ய வேண்டிய கடமைகளைச் செய்வாய். பற்றுகளை நீக்கிக் கடமைகளைச் செய்து வாழ்க்கை நடத்துவாய்.

**சுலோ: 10–16**

பூர்வத்தில் செய்துவந்த வேத மார்க்க யாகங்களைக் கண்ணன் இவ்விடம் மெதுவாக எடுத்துப்பேசி அவற்றை விலக்கி விடுகிறான். பெரியோர்கள் என் மேல் கோபித்துக்கொள்ளக்கூடாது. கீதாசாரியன் கருத்தை அடக்கத்துடன் சொல்லத்துணிகிறேன்.

எந்தக் காரியத்தையும் உன்னுடைய உள்ளத்தில் ஆண்டவனுக்கு அதை அர்ப்பணமாகச் செய்ய சங்கல்பம் செய்து கொண்டு செய்துவிட்டால் அதுவே ஒரு யாகம் ஆகி விடுகிறது என்கிறான் கீதாசாரியன். வேதமார்க்க யாகங்களை விலக்குவதற்கு இந்த முறையில் உபதேசிக்கிறான்.

"பிரஜாபதி பிரம்மன் உலகத்தைச் சிருஷ்டித்தபோது மக்களையும் வேள்வியையும் கூடவே உண்டாக்கினான். இதோ வேள்வி என்கிற இந்தப் பொருள், இது ஒரு காம தேனு. எதை வேண்டுகிறீர்களோ அதைப் பால்போல் தரும் பசு ஆகும் இது. தேவர்களை நீங்கள் பூஜித்தால், நீங்கள் வேண்டினவற்றை யெல்லாம் அவர்கள் உங்களுக்குத் தருவார்கள். நீங்கள் அவர்களுக்கு ஒரு பங்கு கொடுத்துவிட்டு நீங்களும் அவர்களிடம் ஒரு பங்கு பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி, எல்லாரும் நன்மை யடையுங்கள். தேவர்களிடம் நன்மைகளை அடைந்து விட்டு அவர்களுக்கு ஏதும் வேள்விகள் மூலம் கைம்மாறாகக் கொடுக்காவிட்டால் அது திருட்டேயாகும். வேள்விகளில் அன்னத்தை வைத்து வேள்வியால் மிஞ்சிய அன்னத்தை உண்டீர்களானால் பாவமும் குற்றமும் ஏதுமின்றி உங்கள் வாழ்க்கை நடைபெறும். தேவர்கள்


கொடுத்ததைப் பெற்றுக்கொண்டுவிட்டு அவர்களுக்கு அவி தராமல் சாப்பிட்டுக்கொண்டு காலம் கழிக்கிறவர்கள் பாபிகள் ஆவார்கள். வானம் மழை பொழிகிறது. மழை உணவு தருகிறது. அந்த மழை, மக்கள் செய்யும் வேள்வி யால் பெய்கிறது. வேள்விகளைச் செய்வதற்கு மக்கள் வேலை செய்தே தீரவேண்டும். துறவுபூண்டு செயலற்றுப் படுத்தால் வேள்வி செய்யமுடியாது. மக்கள் அனைவரும் தத்தம் கடமைகளைச் செய்தாலே சக்கரம் சுழலும். சக்க ரத்தின் சுழலை நிறுத்திவிடக்கூடாது.

சுலோ : 17-18 வேறு இடத்துக்குப் போகவேண்டும்.

**சுலோ : 19-26.**

**ஆன**படியால், சுயநன்மைக் கருத்தும் பற்றும் அறவே துறந்து, கடமைகளைச் செய்துகொண்டு போகவேண்டு வது அவசியம். பற்றற்ற முறையில் செயல்களைச் செய்து வாழ்க்கை நடத்தினல் மேல் பதவி அடைவோம்.

---



**வண்டிக்காரன் :**—சாமி! சாமி! வண்டி டேசனுக்குத் தான் போவுது. ஏறுங்க கொறச்சலா கூலி குடுத்தா போதும்.

**பிரயாணி :**—கூலியைப் பத்தி யோசனை இல்லேப்பா. நான் இப்பரயிலுக்கே போகணும். நாளை ரயிலுக்கு போறதாயிருந்தா கட்டாயம் உன் வண்டியிலேயே ஏறுவேன்.

# புண்ணியக்ஷேத்திர யாத்திரை

ஸ்ரீமான் டி. எஸ். ராஜகோபாலன், பி. ஏ., எல். டி.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மைல் கணக்காக மலைத் தாழ்வரைகளையும், பள்ளத் தாக்குகளையும் பார்த்து வந்த நாங்கள் சுமார் மூன்று மணிக்கு என்றும் மறக்கமுடியாத காட்சி ஒன்றினைக் கண்டோம். மலைப் பாதையில் இறக்கத்தில் பஸ் செல்லும் போது அழகிய நகரம் ஒன்று தென்பட்டது. தொலைவிலிருந்து அதைப்பார்க்கும்போது அது தேவர்களது நகரோ என்று வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது. தெருக்கள் படிப்படியாக அமைந்திருந்தன; அவற்றுள், அடுக்கு அடுக்காகத் திகழ்ந்த மாளிகைகள் மேக மண்டலத்தளவும் ஓங்குவதாகத் தோன்றின. பள்ளத் தாக்கில் பசுமையான விளைவயல்கள், பக்கங்களில் காடடர்ந்த மலைத் தொடர்கள்; இடையில் வெண்மையான மாளிகைகளின் வரிசைகள்—இவற்றின்மேல் தாழுங் கதிரவனின் வெள்ளிய ஒளி பாய்ந்து, இவற்றின் எழிலைப் பன்மடங்கு அதிகமாக்கியது. சற்று நேரத்தில் நாங்கள் இரண்டு ஆறுகள் கலக்கும் இடத்திற்கு வந்தோம். இந்த ஆறுகள் சேருமிடத்தில் தான் இந்த மாளிகைகள் உள்ளன. இந்த நகரத்திற்குத் தேவப்ரயாகை என்ற பெயர் முற்றிலும் பொருந்தும். இந்த ஆறுகளுள் ஒன்று வடமேற்கிலிருந்து வருவது; இதன் பெயர் பாகீரதி; மற்றது கங்கை, வடகிழக்கிலிருந்து பாய்கிறது. இவை இரண்டும் கலக்கும் இடந்தான் தேவப்ரயாகை யாகும். இந்த ஆறுகள் ஒவ்வொன்றும் இரண்டு மலைகளுக்கு இடையில் பாய்வதால், ஒவ்வொன்றைக் கடக்கும்போதும், பாதை ஒரு மலையில் இறங்கி வேறு மலையில் ஏறுகின்றது. ஆதலால், ஊரைச் சுற்றிப் பாதை இரு முறை போவதுபோல் தோன்றுகின்றது.

கங்கையுடன் நதிகள் கலக்கும் இடங்கள் எல்லாம் பிரயாகை எனப்படுகின்றன. பதரிகாச்ரமம் போகும் வரையிலுள்ள இம்மாதிரியான மற்றத் தலங்கள்—ருத்ரப்ரயாகை, கர்ணப்ரயாகை, நந்தப்ரயாகை, விஷ்ணுப்ரயாகை என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் புண்ணியத் தலமாகும்; யாத்ரிகர்கள் ஒவ்வோரிடத்திலும் தங்கிக் கங்கையில் நீராடுகின்றனர்.

எங்களது பஸ்ஸுகள் தேவப்ர்யாகையில் 15 நிமிஷ காலம் தங்கின. சாலையின் கீழ் நகரத்தின் சாலைகள் படிப்படியாக அமைந்திருந்தன; சாலைகளின் நடுவில் கங்கை விரைந்து செல்லுவதும், நகரத்தின் இரண்டு

எல்லைகளிலும் கங்கையின்மேல் அமைந்துள்ள பாலங்கள், நகரிலுள்ள மாளிகைகள், மண்டபங்கள், ஆலயங்களின் கோபுரங்கள் இவையும் கண்கொள்ளாத காட்சியே யாகும்.

இது புராணத் தலமாகும். முன்பு கிருத யுகத்தில் தேவ சர்மா என்ற முனிவரர் இங்குத் தவம் செய்து, கோவிந்தனைக் காணப்பெற்றுத் தமக்கு முக்தி வேண்டிக் கொண்டதுடன் நில்லாமல், இந்த இடத்தில் கங்கையில் நீராடி இறைவனை இறைஞ்சுபவர் எவராயினும் அழிவில்லாத பேரின்பத்தைப் பெறவேண்டும் என்ற வரத்தையும் பெற்றார்.

ஸேவநாய ஸஸீதம் வை ராமம் லக்ஷ்மணபூர்வஜம் |
ஸுக்ரீவாதி மஹாபக்தைர் யுதம் முநிகணைஸ் ததா ||

என்றவாறு, சீதையோடும் சுக்ரீவன் முதலாய மஹாபக்தர்களோடும், முனிவர்களோடும் கூடிய (லக்ஷ்மணனுக்கு முன் தோன்றலாகிய) ராமனை வழிபடுவதற்காக, தேவர்கள் இத்தலத்தில் தினந்தோறும் கூடுகிறார்கள் என்று புராணம் கூறும். இதில் ராமனுக்காகக் கோயில் ஒன்றுண்டு. இத்தலம் திருமாலின் தலங்கள் நூற்றெட்டனுள் ஒன்று; இதன் பெயர் கண்டங்கடிநகர்; இது பெரியாழ்வாரால் மங்களாசாஸநம் செய்யப்பெற்றது. அவரது பாசுரங்களில் ஒன்று பின்வருவதாகும் :

தங்கையை மூக்கும் தமையனைத் தலையும்
தடிந்த(எ)ம் தாசரதி போய்
எங்கும் தனபுகழா (இ)ருந்தரசாண்ட
எம்புருடோத்தமன் (இ)ருக்கை,
கங்கை கங்கை என்றவாசகத்தாலே
கடுவினை களைந்திடு கிற்கும்
கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற
கண்டம் (எ)ன்னும் கடிநகரே

[முறைதப்பித் தன்னைப் பற்றிய சூர்ப்பணகையின் மூக்கையும், உடலையும் உயிரையும் பிரிப்பதுபோல் தன்னையும் பிராட்டியையும் பிரித்த ராவணனது தலைகளையும் அரிந்து, பின்பு மக்கள் யாவரும் 'ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாம் அபவந் கதா:' என்றவாறு புகழும்படி அரசு செலுத்திய புருஷோத்தமன் இப்போது யாவரும் காணுமாறு உறைந்துள்ள இடம் கண்டங்கடி நகர் என்பதாகும்.]

கங்காதேவியின் பெருமையால் ஏற்றமுற்ற இத்தலத்தைப் பலபடிகளாலும் விவரிக்கின்றார் பெரியாழ்வார். கங்கையின் பெருமையைப் பற்றிய அடிகளில் சிலவற்றைக் கீழே கொடுத்துள்ளேன் :

(1) நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும்
நாரணன் பாதத் துழாயும்
கலந்திழி புனலால் புகர்படு கங்கை . . .

[பரமசிவனது சடையிலுள்ள கொன்றை மலர்களும், நாராயணனது திருவடிகளிலுள்ள திருத்துழாயும் கலந்து வருவதால் பெருமையுற்றது கங்கை.]

(2) சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில்
சங்கரன் சடையினில் தங்கிக்
கதிர்முக மணிகொண்டு (இ)ழி புனல் கங்கை...


[உலகமளந்த காலத்தில், நான்முகன் இறைவனது திருவடியைக் கழுவிய தீர்த்தமாகிய கங்கை, சங்கரனது சடையில் ஏற்கப்பெற்று, ஒளிபொருந்திய ரத்தினங்களை முகந்துகொண்டு பாய்கின்றது.]

(3) எழுமையுங் கூடி ஈண்டிய பாவம்
இறைப்பொழு தளவினி லெல்லாம்
கழுவிடும் பெருமைக் கங்கை . . .

[ஏழு பிறப்புக்களிலும் நம்முடன் சேர்ந்து திரண்ட பாவங்களை எல்லாம் நொடிப்பொழுதில் நீக்கவல்ல பெருமையுடையது கங்கை.]

ராமபிரானது கோயில் மிகவும் சிறியது; விமானமும் அர்த்த மண்டபமும் மாத்திரம் கொண்டது; பிராகாரம், கோபுர வாசல், கொடிமரம் முதலியன இல்லை: தலத்தின் மஹிமையோ எனில் மாணப் பெரிது!

குறிப்பிட்ட நேரத்தில் எங்களது பஸ்ஸுகள் புறப்பட்டன; 5 மணிக்குக் கீர்த்திநகர் சேர்ந்தன. அவ்விடத்தில் மோட்டார் சாலை முடிவுறுகின்றது. கங்கையின் மேலுள்ள தொங்குபாலத்தின் வழியாக அக்கரையை அடைந்து, அங்கிருந்து ஸ்ரீநகர் என்ற பட்டினத்திற்குச் செல்லவேண்டும்; ஸ்ரீநகரிலிருந்து பஸ்ஸுகள் மேற்கொண்டு யாத்திரைக்குப் பயன்படும். கீர்த்திநகருக்கும் ஸ்ரீநகருக்கும் சுமார் 3 மைல்; கங்கையைக் கடந்ததும் கோட்த்வாரிலிருந்து வரும் மோட்டார் சாலையில் பஸ்ஸிலேயே ஸ்ரீநகருக்குச் செல்லலாம்.



கங்கையில் ஓரிடத்தில்
தொங்குபாலம்

ஸ்ரீநகருக்கு இந்தப் பெயர் மிகப் பொருத்தமானது. பஸ்ஸில் போகும்போது சாலையின் இருபுறங்களிலும் பூஞ்சோலைகள் தென்படுகின்றன. வீடுகளின் பின்பக்கத்திலுள்ள தோட்டங்களில் பலம் தரும் மரங்கள் நிறைந்துள்ளன; பணைத்த கிளைகளில் இலைகள் அடர்ந்து இரவியின் கதிரை மறைத்துக் கண்ணும் மனமுங் குளிரச் செய்கின்றன. இந்தப் பட்டினத்தின் அழகை அனுபவிக்க வேண்டில் நாம் அங்கு ஒரு நாள் தங்கியேயாகவேண்டும்.

நாங்கள் அன்றிரவு கம்பளிவாலா சத்திரத்தில் தங்கி, இரவில் உணவு உட்கொண்டபின்பு, மறுநாளைக்கு வேண்டிய தயிரன்னத்தையும் தயார் செய்து கொண்டோம். மறுநாட் காலையில் பஸ்ஸுகள் 7 மணிக்குப் புறப்பட்டன. சுமார் 10 மணிக்கு ருத்ரப்ரயாகை சேர்ந்தன. இந்த இடத்தில் மந்தாகினியும் அளகாநந்தாவும் சேருகின்றன; இவை இரண்டும் ஒன்று சேர்ந்தபின்பு, நதி கங்கை என்று பெயர் பெறுகின்றது. இந்த இடத்திலிருந்து கேதார்நாத் என்ற தலத்திற்குப் பாதை செல்லுகின்றது. ருத்ரப்ரயாகையில் புண்ணிய தீர்த்தம், ஸங்கமத்தில் ருத்ர தீர்த்தம் என்ற இடமாகும். இதைப் பற்றிப் புராணம் கூறுவதாவது:

அத: ப்ருதிவ்யாம் தச்ச்ரேஷ்டம் ருத்ரதீர்த்தம் வராநநே |
யத்ர ப்ரஹ்மாதயோ தேவா நாகாநந்தாதய: பரே ||

[அழகு மிக்க முகத்தையுடையவளே! எந்தத் தீர்த்தத்தில் பிரமன் முதலாய தேவர்களும், அனந்தன் முதலாய நாகர்களும் ஆசையுடையவர்களோ, பாரின்மேல் அப்படிப்பட்ட பெருமைகொண்டது இந்தத் தீர்த்தம்.]

பஸ்ஸுகள் இங்குச் சிறிது நேரந்தான் தங்கியிருந்தன; ஆதலால், நாங்கள் நீராடவில்லை; பசியை மாத்திரம் தீர்த்துக்கொண்டு பஸ்ஸுகளில் அமர்ந்தோம்.

இவ்வாறான இடங்களில் நாம் யாத்திரை போகும்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டுவன:

(1) கண்ட இடங்களில் கங்கையில் இறங்கி நீராடக்கூடாது. பலவகையான நிலப்பரப்பில் பாய்வதால், தண்ணீரில் வண்டல், உலோகத் தாதுப் பொருள்கள் கலந்திருக்கும்; இவை உடல் நலனைக் கெடுத்துவிடும். அன்றியும் இந்தத் தலங்களில் குளிர் மிகுதியாதலால் சீதளமான நீரில் குடைந்தாடுவதும் கூடாது.

(2) கங்கையின் தீர்த்தம் எவ்வளவு புனிதமாயினும் இந்த இடங்களில் இதை உட்கொள்ளக்கூடாது. அப்ரகப்

படிவுகள் உள்ள இடங்களில் கங்கை பாய்வதால், தீர்த்தம் பருக ஏற்றது அன்று. பல இடங்களில் தண்ணீரைச் சுத்தம் செய்து தாரைகளாக வெளிப்படுத்துகிறார்கள் துரைத்தனத்தார்; இந்தத் தண்ணீர்தான் குடிப்பதற்குத் தகுதியானது.

(3) நாம் யாத்திரையிலிருக்கும்போது உணவு மிதமாக இருக்கவேண்டும்; கண்ட இடங்களில் உணவு வாங்கி உட்கொள்ளக்கூடாது. இம்மாதிரியான இடங்களில் தினம் இரண்டு வேளைக்குமேல் சாப்பிடக்கூடாது. இரவு சப்பாத்தியும் பகலில் சாதமும் ஏற்ற உணவாகும். ரசம், சாம்பார்—இவற்றிற்குப் புளியை உபயோகிக்காமல் எலுமிச்சம் பழத்தை உபயோகித்துவந்தால், ஒருவகை நோயும் அணுகாது. இவைதான் எங்களுக்குத் தலைவர் இட்ட எச்சரிக்கை. இவற்றிலிருந்து நாங்கள் சிறிதும் வழுவாமல் ரிஷிகேஷ் திரும்பும் வரையில் நடந்துகொண்டோம்.

மாலை 2மணி சுமாருக்கு நாங்கள் பீப்பல்கோடி வந்தோம். இதற்குமேல் மலைமீது நடந்துதான் போகவேண்டும். அன்று முழுதும் அங்குத் தங்கினோம். மறுநாட் காலையில் யாத்திரைக்காகச் சிலர் குதிரைகளை அமர்த்திக்கொண்டனர்; இருவர் தண்டி என்ற டோலியை அமர்த்திக் கொண்டனர். பெண்பாலரில் இருவர் கூடைகளில் செல்லுவதற்கு ஏற்பாடு ஆயிற்று. நாற்பது மைல் நடக்க இயலாதவர்கள் குதிரையின் மேல் சவாரி செய்யலாம்; போய் வரக் குதிரை ஒன்றுக்கு ரூ. 65. குதிரைக்காரன் குதிரையின் அருகிலேயே நடந்து வருவான். தண்டி என்பது



நால்வர் தூக்கும் தண்டி

கான்வாஸ் நாற்காலி போன்றது. அதற்கு முன்னும் பின்னும் இரட்டை மாட்டு வண்டி மூக்கணைபோல் ஒன்று உள்ளது; அதை முன்னே இருவரும் பின்னே இருவரும் தாங்கிச் செல்லுகின்றனர். இதற்குக் கூலி ரூ. 160 வரையில் ஆகும். கூடையென்பது பிரம்பால் ஆனது; சுமார்

சென்ற இதழில், மகாத்மாஜி சேவா சங்கம் நடத்திய சிறு கதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றதை ப்ரசுரித்தோம். இவ்விதழில் முதல் பரிசு பெற்ற கட்டுரையை ப்ரசுரித்து இருக்கிறோம்.

குமாரி P. B. ரங்கநாயகி

# *** கலை பிரதானமா? **** கடமை பிரதானமா?

"கலைகள் நிறைந்த எங்கள் தமிழ் வாழ்கவே."

என்ற நம் மகாவியின் வாக்குப்படி, தமிழ் பாஷையே கலைக்குப் பேர்போனது என்றால், நம் தமிழ்நாடும் இப் பரந்த பாரத நாடும் கலையில் உலகத்தின் முன்னிலையில் இமயமலை நிமிர்ந்து நிற்பது போல் உயர்ந்து விளங்குகிறது. எந்தக்கலையை எடுத்துக்கொண்டாலும்—சிற்பம், ஓவியம், இசை, நாடகம், நிருத்தியம், இவற்றுள், 13-வது நூற்றாண்டிலிருந்தே பாரதநாடு புகழ் பெற்று இருக்கிறது. சேர, சோழ,பாண்டிய, பல்லவ அரசர்கள் கலைக்கே தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் தியாகித்து, தங்களையே அர்ப்பணித்திருக்கிறார்கள்.

கலை நமக்கு அவசியம் ஏன் என்றால், நம்முடைய கலாசாரம், பழக்க வழக்கம், நடை, உடை, பாவனை முதலியவை மற்றவர்க்கும் தெரிய ஹேதுவாகிறது. இதனால் நம் ஊரின், நாட்டின், தேசத்தின் புகழ் என்னும் கொடி வானோங்கி நிற்கிறது. கலையில் தேர்ந்த கலைஞர்கள் இல்லாத நாடு எங்குமே கிடையாது. கலை இல்லாத நாடு களையில்லாத நாடு போல் இருக்கும்.

ஆனால், கலை என்னும் பெயர் அரிய சாதனையை சாதிக்கும்போது கடமை என்னும் கலையின் தாயைமறக்கக் கூடாது. கடமை என்பது மனிதனுக்கு பிறக்கும்போதே அவன் ஆத்மாவுடன் கலந்த ஒரு ஒளி. மனிதன் எப்படித் தன்னை நான்கு வர்ணங்களாகப் பிரித்திருக்கிறானோ அதுபோல் கடமையும் அந்த அந்த காலத்தில் முன்னோக்கி நிற்கிறது. கலைக்கும், கடமைக்கும் வேற்றுமை ஒன்றும்

---

3 அடி ஆழம் உள்ளது. அதில் உட்கார்ந்துகொண்டால், கூடையை முதுகில் தாங்கிச் செல்லுகின்றான் கூடைக் காரன். இவனுக்குக் கூலி சுமார் ரூ. 45 ஆகும்.

பீபல்கோடியில் மறுநாள் யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம். சூரிய அஸ்தமனத்திற்குப் பின் ஸஹஸ்ரநாம பாராயணம், பஜனை முதலியன நிகழ்ந் தன. பின்னர் நித்திரைக்குச் சென்றோம்.

இல்லை. தன் கடமை முன்கொண்டு கலைக்கு உயர்வு கொடுத்தால், அக்கலை மேம்பட்ட கலையாக இருக்கும். அந்தக் கலையே மக்களினூடே என்றும் விளங்கிவரும்.

கலை என்னும் பெயரைக்கொண்டு அந்தக் கலையையே கொலை செய்யும் அற்பர்கள், இந்தக் கடமை முக்கியமென்று தெரிந்தால், தலைகுனிய வேண்டியதுதான். கலை என்ற பெயர் நாடு, மக்கள், அவர்களின் பழக்க வழக்கம் முதலிய எல்லாம் சேர்ந்தது. தற்காலத்தில் கலையின் பெயரால் தன்னை தன்மானத்தை—தன் குல கௌரவத்தை, தன் பெருமையை எல்லாவற்றையும் மனிதன் இழந்துவிடுகிறான். முன் காலத்தில் ரஜபுத்திரன், ரஜபுத்திரஸ்த்ரீ முதலிய அரச அரசியர் வீரத்திலும் சரி, தன் கடமையிலும் சரி; உயிரையே த்ருணமாக மதித்திருந்தனர். நாள் ஆக ஆக மனிதனுக்குப் பணப்பேய் பிடித்துவருகிறது. பணத்தாசையினால் தன்னை மட்டும் தாழ்த்திக்கொள்ளவில்லை; தன் நாட்டின் கௌரவத்தையும் இழக்கவைக்கிறான். இதனால்நாடு, மக்கள் யாவரும் பாதிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட கலைக்கு நாம் ஆதரவு கொடுக்கக் கூடாது.

கலைக்கும், நாட்டின் நலனுக்கும் பாடுபடும் எத்தனையோ கலா நிபுணர்களும் கலாபிமானிகளும் இருக்கிறார்கள். நாட்டின் புகழை புகழ் ஏணியின்மேல் வைக்க, தேச விதேசங்களுக்கு யாத்திரை செய்து, பல தேச மக்களினூடே தங்கள் கலையை வியாபிக்கச் செய்து இன்பத்தை நிலைநிறுத்தி, தங்களையும் கௌரவித்துக்கொண்டு, நாட்டையும் கௌரவித்திருக்கிறார்கள். இதனால், மற்றதேசம் நம் தேசத்தோடு நட்புக்கொள்ள ஹேதுவாகிறது. தேசவிதேச நட்புரிமைக்குக் கலையே பிரதான சாதனமாகும். இக் கலை கடமையுடன் கூடிய சேயாக இருப்பதனால், இது புகழ் அடைகிறது.

மனிதனுக்கு உற்ற நண்பன் மனச்சாட்சி. மனச்சாட்சி என்பதுமனிதனின் கெட்டகாலத்திலும், நல்ல நிலைமையிலும் ஊக்கும் ஒரு கருவி. மனிதன் எந்த சமயத்திலும் சறுக்கி விழாமலிருக்க மனச்சாட்சி உதவும். மனித ஆணவம் அதை மறைத்து கீழே விழச்செய்யும். இதுதான் உலக நீதி. கடமை என்பது மனிதனின் ஒவ்வொரு அங்கத்திலும், ஒவ்வொரு ரத்தச்சொட்டிலும் ஊறி இருந்தால் அவன் எல்லாவற்றிலும் முற்பட இருப்பான். கடமை என்பது மனிதனை எந்தச் சமயத்திலும் தட்டி எழுப்பும். அதுவும் ப்ரத்யேகமாக கலைவிஷயத்தில் மனிதன் தன் கடமை, பிறகடமை இரண்டையும் யோசிக்கவேண்டும். தாய் எப்படி தன் குழந்தையை ஒரு உத்தமனாக வளர்க்கிறாளோ, அதுபோல் கடமை யென்பது கலையை உன்னத ஸ்தானத்திற்குக் கொண்டுவருகிறது.

பாரதநாடு முன் காலத்திலிருந்தே எது ஒன்றுக்கும் குருவாக இருந்து வருகிறது. எந்தக் கலையும் (படிப்பு, இசை, நிருத்தியம் முதலியபல) பாரதநாட்டிலிருந்துதான் வெளி தேசங்களுக்குப் பரவிற்று,பரவி வருகிறது என்று சரித்திரத்தின் பொன்னேடுகளிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. நம்தேச ஆசாரப்படி எந்த நம் நாட்டுக் கலையும் சத்யம், சிவம், சுந்தரம், (ஸத், சித், ஆனந்த)என்ற மூன்று பரம்பொருளின் உருவாகக்கொண்டது. இவ்வபூர்வ கலை நம் பாரதநாட்டில்தான் நடந்துவருகிறது என்பது நாம் மிகவும்கௌரவத்தோடுசொல்லிக்கொள்கிறோம். அப்படிப் பட்ட கலை எதனுல் பிரதான்யமாகக் கௌரவிக்கப்படு கிறது என்றுல், கலையுடன் கடமையும் சேர்ந்து இரட் டையர்கள் போல் நிற்பதால் தான் அக் கலைக்கு அத்தனை புகழ்.

எந்த ஒரு சிறிய விஷயத்திலும் கடமைப்படி நடந் தால்தான் மனிதன், தன் பகுத்தறிவுப்படி நடக்கிறன் என்பது தெரியவரும். இல்லாவிட்டால் நமக்கும் விலங்குக் கும் வேற்றுமையே இல்லை; வீரம், கலை இவ்விரண்டிற்கும் கடமையே முக்கியம். தாய் எப்படி நமக்கோ, அதுபோல் கலைக்குத் தாய் கடமை.கலையைப்பயிற்றும் சமயம் குருவுக்கு செய்யும் காணிக்கை, கடமை ஊக்கும் செய்கையே தவிர வேறென்றும் இல்லை. அதுபோல் கலைய்யைப் பரவச் செய்யும் எந்தக் காலத்திலும் கடமையைத் தவறவிடக் கூடாது.

முக்கியமாக,கலையையே நாம் ஆத்மார்த்தமாகவும், எல் லாம்வல்லஇறைவனிடமே அர்ப்பணித்து மேலே சொன்ன படி ஸத்யம், சிவம், சுந்தரம். இவற்றுல் ஆனந்தங் கொண்டு, கலைக்கு நாம் உழைத்தோமே யானுல், அதுவே நாம் கலைக்குச் செய்யும் கடமையாகும். ஆகையால்,கடமை யும், கலையும் ஒன்றேடு ஒன்று பின்னி நிற்கிறது. சந்தி ரன் இல்லா இரவுபோலும் சூரியனில்லாப் பகல்போலும் கடமை கலையோடு சேர்ந்து இராவிட்டால் மனிதன் பண் பின் தரம் க்ஷீண தசையை அடையும்.

இதனுல் கலை பிரதானமா? கடமை பிரதானமா? என்ற பேச்சானது, மனிதனுக்கு உடை அவசியமா? உணவு அவசியமா? என்று கேட்பது போல் இக் கேள் வியும் யாவருக்கும் தெரிந்த விடையுள்ளதாக இருக்கிறது.

இதிலிருந்து கடமையும், கலையும் ஒன்றுக்கொன்று பிரதானமாக இருந்தால்தான் நாடும் மக்களும் உயர வழி யாகும். கலைக்கும் விலைமதிப்பற்ற கௌரவம் கிடைக்கும் என்பது திண்ணம்.

குமாரி. தி. கமலா

# "இனிது முடிவடைந்தது"

[காலேஜ் மாணவிகள் சங்கத்தின் காரியதரிசிகளான சுந்தரியும், டெய்ஸியும் மற்றும் கமிட்டி அங்கத்தினர்களான நிர்மலா, விஜயா, கல்யாணி, சீதா, மைதிலி, வசுமதி, சரோஜா, சாந்தா முதலானவர்கள் காலேஜ் ஹாலில் கூடி இருக்கின்றனர்]

**சுந்தரி:**—சகோதரிகளே! நமது கல்லூரியின் மாணவியர் சங்கத்தின் தூண் போன்ற கமிட்டி....

**நிர்மலா:**—(இடைமறித்து) காரியதரிசி அவர்கள் இந்த வார்த்தையை உடனே வாபஸ் பெற வேண்டும். 'தூண் போன்று உபயோகமற்று நின்று கொண்டிருக்கிறீர்கள்' என்று நீ மறைமுகமாக எங்களைக் குத்திக் காட்டுகின்றாய் போலும்.

**சுந்தரி:**—நிர்மலா! தவறாக நினைத்துக் கொண்டதற்காக நான் மிகவும் வருந்துகின்றேன். ஒரு வீட்டிற்குத் தூண் எப்படி பளுவைத் தாங்க அவசியமாகின்றதோ, அதே போல இச் சங்கத்தின் பளுவான பொறுப்பைத் தூண்கள் போன்று நீங்கள் தாங்குகின்றீர்கள் என்ற பொருளில்தான் கூறினேனே அன்றி வேறு எவ்விதக் கருத்திலும் நான் கூறவில்லை.

**விஜயா:**—நிர்மலா! உனக்கு மாத்திரம் ஏன் எதுவுமே தப்பாகவே படுகின்றது? உன்னாலே டைம்தான் வேஸ்ட் ஆகிறது. சுந்தரியை மேலே பேசவிடு

**நிர்மலா:**—உனக்கு எதுவுமே தப்பில்லை. அதுவும் காரியதரிசி சுந்தரி வாயிலே வந்துட்டால் கேட்கவே வேண்டாம். உனக்கு நேரமானால் ஒரு காலிப் பேப்பரில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போய்விடு; பிறகு எழுதிக் கொள்ளலாம், இன்று நிறைவேறும் தீர்மானத்தை. காரியதரிசியின் தீர்மானத்திற்குத் தான் என்றும் நீ எதிர்த்துப் பேசமாட்டாயே!

**விஜயா:**—(வருத்தத்துடன்) எனக்கு இருக்கும் மதிப்பின் அழகு நன்றாகத் தெரிந்துவிட்டது. இனிமேலும் உங்களிடையே நானும் ஒரு கமிட்டி மெம்பராக இருக்க என் மனம் ஒப்பாததால் இப்பொழுதே காரியதரிசி அவர்கள் என்னுடைய ராஜினமாவை ஏற்றுக் கொள்ளட்டும்.

**சுந்தரி:**—பொறு விஜயா! வீணாய் உங்களுக்குள் சண்டை வேண்டாம். நான் கூறிய வார்த்தையை வாபஸ் பெறுகின்றேன். அவ்வளவுதானே? மேலே விஷயத்தைச் சொல்லலாமா?

**அனைவரும்**:—சொல்லலாம்.

**சுந்தரி**:—நமது காலேஜின் ஹாஸ்டல் கட்டிட நிதிக்காக நமது சங்கம் ஒரு **நாடகம்** நடத்தி உதவவேண்டும் என்பது நமது பிரின்ஸ்பாலின் உத்தரவு. நாம் எந்த நாடகம் நடத்தலாம் என்று யோசனை செய்யவேண்டித்தான் உங்களை அவசரமாகக் கூட்டினேன்.

**கல்யாணி**:—நீங்கள் எந்த நாடகம் போட்டாலும் சரி, இந்தத் தடவை எனக்கு கதாநாயகி பார்ட்தான்வேண்டும்.

**நிர்மலா**:—உனக்கா? சரி, முக்காலியை உபயோகித்துக் கொள்ளலாம்!

**கல்யாணி**:—எதற்காக?

**நிர்மலா**:— கதாநாயகன், கதாநாயகியான உன்னை உன் முகவாயைப் பிடித்து 'மானே, பேனே' என்று கொஞ்சவேண்டி வந்தது என்று வைத்துக் கொள். அப்பொழுது அந்த முக்காலியின்மேல் ஏறிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் நீ குனிந்து கொள்ளலாம். அதைவிட கதாநாயகனை அப்படியே தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டுவிடு. அப்பொழுதுதான் அவனுக்கு எட்டும்!...

**கல்யாணி**:—போ, நிர்மலா! எனக்கு ஒவ்வொரு தடவையும் கதாநாயகன் பார்ட் எடுத்துண்டு அலுத்துப் போச்சு. இந்தத் தடவையாவது பெண் வேஷத்திலேயே நடிக்கலாம் என்று ஆசைப்பட்டால் நீ என்னவோ கேலி செய்கிறாயே.

**சீதா**:—கல்யாணி! **'சாவித்திரி நாடகம்'** தயாரித்து அதில் எமன் வேஷம் வேண்டுமானால் போட்டுக் கொள்ளலாம் நீ.

**மைதிலி**:—உனக்குப் பெண் பார்ட்தானே வேண்டும், கல்யாணி! மண்டோதரி இராவணனை விட உயரமாக இருப்பாளாம். அந்த பார்ட் வேண்டுமானால் நீ எடுத்துக் கொள்ளேன்.

**கல்யாணி**:—ஐயையோ! வேண்டவே வேண்டாம். வழக்கம்போல் கதாநாயகனாகவே இருக்கின்றேன்.

**சுந்தரி**:—கோபமா கல்யாணி! இந்தக் காலேஜிலேயே உயரமாக இருக்கின்ற உனக்குக் கதாநாயகி பார்ட்டை எப்படிக் கொடுப்பது! நீயே சொல்லு!

**கல்யாணி**:—அது சரி! எந்த டிராமா போடப் போகின்றீர்கள்?

**விஜயா**:—"**வள்ளி கல்யாணம்**" போடலாம். நன்றாக இருக்கும்.

**சுந்தரி**:—**ஆண்** வேஷம் நிறைய இல்லாத டிராமாவாக இருந்தால் தேவலை. வள்ளி கல்யாணத்தில் முழுவதும் ஆண்கள்தான். நாரதர் வேறு அதில் வருகின்றார்.

பாடத் தெரிந்தவராக அதற்குத் தகுந்த ஆளைப்பொறுக்கு வதே கடினம்.

**டெய்ஸி:**—அதற்கென்ன? நாரதருக்குப் பதில் அவருடைய ஒய்ப் வந்து அவர் செய்யும் வேலையைச் செய்வதாக இருக்கட்டுமே. (எல்லோரும் கொல்லென்று சிரிக்கின்றனர்)

**நிர்மலா:**—அதே போல் சுப்ரமண்யருக்குப் பதில் அவருடைய பஸ்ட் ஒய்ப் தெய்வயானையே வந்து வள்ளியைக் கல்யாணம் செய்து கொண்டு போகட்டும். ஆனால், விநயகருக்கு மனைவி கிடையாதே. நாரதருக்கு ஒரு மனைவி கிடைக்கும்பொழுது விநாயகருக்குத்தானா கிடைக்கமாட்டாள். (மீண்டும் சிரிப்பு)

**சுந்தரி:**—சகோதரிகளே! சிரிக்காதீர்கள்! கிறிஸ்டியனான டெய்ஸிக்கு நாரதருக்கு மனைவி உண்டா, இல்லையா என்று எப்படித் தெரிந்திருக்கும்? வள்ளி கல்யாணம் வேண்டாம். வேறு நாடகம் சொல்லுங்கள்.

**வசுமதி:**—'சகுந்தலை—துஷ்யந்தன்' நாடகம் போடலாம். ஆனால், நான்தான் சகுந்தலை.

**நிர்மலா:**—சபாஷ்! வசு! கதையே மாறிவிடும். துஷ்யந்தன் மோதிரத்தைக் கொடுத்ததை மறந்து விடுவதற்குப் பதில், சகுந்தலை மோதிரத்தைப் பெற்றுக் கொண்டதை மறந்து விடுவாள்.

**வசுமதி:**—சீ! என்னதான் எனக்கு மறதி அதிகமாக இருந்தாலும் டிராமாவில் அவ்வளவு மோசமாகவா நான் மறந்துவிடுவேன். இனியும் நிர்மலா இம்மாதிரியாக ஏதாவது கேலி செய்தால் செக்ரெட்டரிகள்தான் அதற்குப் பதில் கூறவேண்டும்.

**டெய்ஸி:**—உங்கள் சண்டைக்கெல்லாம் நாங்கள் ஏன் பொறுப்பேற்க வேண்டும்? நிர்மலாவிடமே சண்டை போட்டுக் கொள்.

**சுந்தரி:**—உஷ்! ஸைலன்ஸ், புராண கதையே வேண்டாம். சமூக டிராமா ஏதாவது போடலாம்.

**சரோஜா:**—எங்கள் மாமா 'முகாரி மாளிகை' என்று ஒரு சோக டிராமா எழுதி இருக்கிறார். அதைப் போடலாமா?

**நிர்மலா:**—ஆஹா! அதைப் போடலாம். ஆனால், ஒவ்வொரு டிக்கட் கூடவே கொஞ்சம் கிளிசரைனும் இனமாக ஒவ்வொருவருக்கும் அனுப்பியாகவேண்டும்.

**சரோஜா:**—ஏன்?

**நிர்மலா:**—அந்த நாடகத்தைப் பார்த்து அழுகை வராவிட்டால் அந்த கிளிசரைனைத் தடவிக் கொள்ளலாம், அல்லவா!

**சரோஜா**:—ஷட் அப்! நீ எங்க மாமாவை இன்ஸல்ட் பண்ணுகிருய்!

**நிர்மலா**:—இல்லே, இல்லே; எனக்கென்ன வந்தது உங்க மாமாவைப் பற்றி! நாடகத்தில் நம்முடைய நடிப்பைத்தான் குறித்தேன்.

**கல்யாணி**:—எங்களுடைய நடிப்பைக் குறிக்க மாத்திரம் உனக்கு ஏது உரிமை?

**நிர்மலா**:—அதைக் கேட்க உனக்கு ஏது உரிமை?

**சுந்தரி**:—தயவு செய்து அமைதியாக இருங்களேன்.

**கல்யாணி**:—முதலில் எங்களுடைய உரிமைப் பிரச்னே தீரவேண்டும்.

**சீதா**:—அதோ! எங்கள் காரின் ஹாரன் கேட்கின்றது; சீக்கிரம் முடியுங்கள் கூட்டத்தை.

**சுந்தரி**:—சரி! நானே சொல்கின்றேன். ஏதாவது ஹாஸ்யம் நிறைந்த சமூக டிராமா போடலாம்.

**சாந்தா**:—அதற்கும்தான் நிர்மலா சொல்லுவாள், ஒவ்வொருவருக்கும் அருகில் நம்முடைய ஆட்கள் யாரையாவது உட்கார்த்தி வைக்கவேண்டும் என்று.

**டெய்ஸி**:—எதற்கு?

**சாந்தா**:—அவர்களுக்கு அருகில் இருந்து 'கிசு கிசு' மூட்டினல்தானே நம்முடைய ஹாஸ்ய டிராமாவைக் கண்டு அவர்கள் சிரிப்பார்கள்!

**நிர்மலா**:—நான் இதை முற்றிலும் ஆமோதிக்கிறேன்!

**சாந்தா**:— எல்லாவற்றிற்கும் எதிர்வாதம் பேசுகின்ருயே; நீதான் ஒரு உருப்படியான யோசனே சொல்லேன்.

**நிர்மலா**:—சொல்லட்டுமா? டிராமாவே வேண்டாம். பேசாமல் ஒரு நாட்டியக் கச்சேரி வைத்துவிடலாம். வசூலும் நிறைய ஆகும்.

**சாந்தா**:—அது சரி! டான்ஸ் யார் ஆடுவது?

**மைதிலி**:—(கேலியாய்) ஏன்? நம்ம நிர்மலாவே ஆடுவாளே!

**நிர்மலா**:—சேச்சே! இதற்குள்ளாகவா நான் ஆடுவது? இன்னும் முப்பது வருஷங்களுக்கப்புறம் ஹாஸ்டலே புதுப்பிக்கறதுக்காக ஒரு நிதி திரட்டுவார்களல்லவா? அதற்கு நான் ஆடுகின்றேன்! (எல்லோரும் சிரிக்கின்றனர்)

**டெய்ஸி**:—யாரை ஆடச் சொல்வது? விளேயாடாமல் சொல்லு, நிர்மலா.

**நிர்மலா**:—இப்பொழுது பிரபலமாக வி[illegible]ங்கும் பிரமிளா-பால்ராஜ் கோ[illegible]டியினரையே ஆடும்படியாக [illegible]ற்பாடு செய்யலாம். நம்ம பிரின்ஸ்பாலுக்கு நெருங்கிய சிநேகிதர்கள் தானே அவர்கள்?

**சுந்தரி**:—கட்டிடம் மேலே கட்டாவிட்டாலும் கட்டிய அஸ்திவாரத்தையே இடிக்க ஆரம்பித்து விட்டாயே, நிர்மலா! டான்ஸ¬மாச்சு உட்டான்ஸ¬மாச்சு. நாம் நாடகம் தான் போடவேண்டும்.

**நிர்மலா**:—சகோதரிகளே! டிராமா போடும் உத்தேசத்தை நான் பலமாக எதிர்க்கின்றேன். என்னுடைய விருப்பத்தை ஆதரிக்கின்றவர்கள் கையை உயர்த்துங்கள்!

[கமிட்டி அங்கத்தினர்களுள் விஜயாவைத் தவிர மற்றவர் அனைவரும் கையை உயர்த்துகின்றனர். விஜயா மாத்திரம் பாதி கையை உயர்த்துகின்ருள்.]

**நிர்மலா**:—(கேலியாய்) நீ தாராளமாகக் கையைக் கீழே போடலாம் விஜயா! ஏனெனில், நாங்கள் ஏழுபேர் இருப்பதால் எப்படியும் எங்கள் பக்கம்தான் ஜெயிக்கும்.

**சுந்தரி**:—சரி, உங்கள் இஷ்டம்! சகோதரிகளே! நமது சங்கத்தின் இன்றைய கமிட்டிக் கூட்டம் நமது காலேஜின் ஹாஸ்டல் நிதிக்காக ப்ரமிளா-பால்ராஜ் கோஷ்டியினரின் நாட்டியக் கச்சேரியை நடத்துவதென்ற தீர்மானித்ததுடன், இனிது முடிவடைந்தது!

**சாந்தா**:—அப்பா! எவ்வளவு சண்டைகள் நடுவில் போட்டாலும் சொல்லுவதென்னவோ இனிது முடிவடைந்ததுதான்.

**சீதா**:—ஏனெனில் முடிகிறது என்று நினைக்கும் பொழுது இனிமையாக இருக்கிறது அல்லவா?

[சுந்தரி, டெய்ஸியைத் தவிர மற்றவர் அனைவரும் செல்கின்றனர்]

**டெய்ஸி**:—சுந்தரி! நீயே ஒரு நாடகம் போட்டுவிட்டாயே. ஆரம்பத்தில் நீ நாடகத்தைப் பற்றிப் பேச்செடுத்தவுடன் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இப்பொழுதுதான் உன்னுடைய ட்ரிக் புரிகின்றது.

**சுந்தரி**:—இச் சங்கத்தின் காரியதரிசியாக இருந்து நான் கண்ட அனுபவம் இது; நம் பிரின்ஸ்பாலோ இந்த வருஷம் டிராமா வேண்டாம். பால்ராஜின் டான்ஸ் வைத்து விடலாம் என்று கூறிவிட்டார். நான் அதைக் கமிட்டிக் கூட்டத்தில் கூறினல் எப்பவும் நமக்கு எதிராகப் பேசும் நிர்மலாவும், அவளுடைய வாய் சாதுரியத்தில் மயங்கி மற்றவர்களும் அதை ஆட்சேபிப்பார்கள். டிராமா இல்லாவிட்டால் பால்ராஜ் கோஷ்டியின் டான்ஸைத்தானே நம்ப காலேஜிலே ஏற்பாடுச் செய்வது வழக்கம். அதனல், ஆரம்பத்தில் நான் டிராமாவை ஆதரித்துப் பேசினேன். ஆனல், முடிவு நமக்கு சாதகம் தானே!

**டெய்ஸி**:—அதான் 'இனிது முடிவடைந்தது' என்று கூறினயா?

[இருவரும் மகிழ்ச்சியுடன் செல்கின்றனர்]

# மேனாட்டுத் தத்துவம்

## இரண்டாம் பாகம்

## பிளேட்டோ கண்ட சமயம்

ஸ்ரீமான் ரா.ஸ்ரீ. தேசிகன், எம்.ஏ.

ஏப்ரல் இதழ்த் தொடர்ச்சி

### உலகத்தோற்றம்.—(Cosmogony)

டைமேயியஸ் (Timaeus) என்ற பேச்சில் பிளேட்டோ உலகம் எப்படித் தோன்றிற்று என்ற பொருளைப் பற்றித் தம் கருத்துக்களை அளிக்கின்றார். பிரபஞ்சம் தோன்றிய விதம் மனிதனின் சொல்லையும் சிந்தையையும் கடந்து நிற்கின்றது என்று பிளேட்டோ மொழிகின்றார். அறிவு வட்டத்திற்கப்பால் அது நின்றாலும், அதன் சம்பந்தமான ஊகங்களை நாம் செய்யாமலிருக்கமுடியுமோ?

இப்பொழுது நம்முன் மிக வனப்புடன் விரிந்து கிடக்கின்ற உலகம் தோன்றித் தோன்றி மறைகின்றது. ஆனால், இப்பொழுது கதிரவன் குறித்த நேரத்தில் மிகப் பொலிவுடன் காட்சி அளிக்கின்றான். மதியைச் சுற்றி விண் மீன்கள் பண்ணிசைத்து நடனமாடுகின்றன. மாதங்களின் ஊர்வலத்தைப் பார்க்கின்றோம். பருவ காலங்கள் பவனி வருகின்றன. செவிப்புலன் நுகராத ஒரு தெய்வ கானத்திற் கிணங்க உலகம் நடனமாடுகிறது என்று கூறினால் அது மிகையாகாது. காணப்படுகிற உலகத்திற்குக் காணப்படாத் ஒரு சிதையா மூலம் இருக்கத்தானே செய்யும். ஒழுங்காய் ஓடுகின்ற உலகத்தைப் படைத்த ஓர் உத்தம தெய்வத் தச்சன் இல்லாமலிருக்க முடியாது. இந்திரியம் நுகரும் இப் பிரபஞ்சம் மறைந்துபோகும்; ஆனால், இந்திரியங்களைக் கடந்து நிற்கும் பரம்பொருள் அழிவற்றுத் திகழ்ந்து கொண்டேயிருக்கும்.

"இந்தப் பிரபஞ்சத்தை ஏன் அந்தப் பரம்பொருள் படைக்க வேண்டும்? எனக் கேள்வியை எழுப்புகின்றார். பகவான் கலியாண குணங்கள் நிறைந்தவர். அவருக்கு அழுக்காறு என்பது இடையாது. அழுக்காறு அற்றவரான காரணத்தால், தம்மைப் போல எல்லாம் மிளிரவேண்டும் என்று கருதினார். முதலில் உலகம் உருவற்று இருண்ட ஒரு குழப்பத்தில் ஆழ்ந்து கிடந்தது. இதில் ஓர் ஒழுங்கை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அரும்பிற்று. அவருக்குத் தனித்த நிலையில் இன்பமில்லை. சேர்ந்து இன்பத்தை நுகர வேண்டு மென்பதே அவருடைய அருள் நோக்காகும். இதே கருத்துதான் நம் உபநிடதங்களில் முரசடிக்கப்படுகின்றது.

எல்லாவற்றையும் தன்னுளே அடக்கி நின்ற ஒரு மகா புருஷனைத் தோற்றுவித்தார். முதலில், பிரபஞ்சத்தில் தீயும் மண்ணுந்தான் இருந்தன. பிறகு, இவைகளின் இடையே நீரும் காற்றும் தோன்றின என்கிறார். ஆனால், நாம் கூறுகிறதுபோல்

ஆகாயத்தைப்பற்றிப் பிளேட்டோ பேசவில்லை. நம்முடைய படைப்பின் வரிசை இதுதான். முதலில், ஆகாயம் விரிந்தது; ஆகாயத்தில் காற்று எழுந்தது; காற்றில் தீ திகழ்ந்தது; தீயில் நீர் பிறந்தது. அந்நீரில் மண் மலர்ந்தது. அம்மண்ணில் பூண்டுகள் தோன்றின. இப் பூண்டுகளில் அன்னம் விளைந்தது. அன்னத்திலிருந்து மனிதன் உதயமானான். அன்னமயம் பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம் என்ற கோசங்களைப்பற்றி வேதங்கள் சாற்றுகின்றன. இப்படி விரிந்த பிரபஞ்சத்திற்குள் கரந்து நிற்கின்றது பரமாத்மா. நம்முடைய உடலுக்குள் எப்படி ஆத்மா திகழ்கின்றதோ, அப்படியே பிரபஞ்சத்திற்குள் பரமாத்மா மறைந்து நிற்கின்றார்.

உடலைப் படைப்பதற்குப்பின் ஆத்மாவை அவர் உண்டு பண்ணவில்லை. ஆத்மா தோன்றிய பிறகே உடல் உண்டாயிற்று. ஆத்மாவின் வசததில்தான் உடல் நிற்கின்றது. சூன்னியத்திலிருந்து ஆண்டவன் உலகத்தைப் படைத்தார் என்று யூதர்கள் கருதுகின்றனர். பிளேட்டோவின் கருத்தோ வேறு விதமாயிருக்கிறது. பஞ்சபூதங்கள் எப்பொழுதுமே இருக்கின்றன. இவைகளை வைத்துக்கொண்டு ஆண்டவன் தம் படைப்புக்களைச் செய்கின்றான் என்று பிளேட்டோ கூறும் தத்துவம் ஆராய்ச்சிக்குரியது. பிளேட்டோவின் கருத்தைத் துருவி ஆராய்ந்தால் வைணவர்களும் சைவகர்களும் பின்பற்றும் விசிஷ்டாத்வைத கொள்கையைத்தான் அவர் வெளியிடுகின்றாரோ என்ற எண்ணம் நம் மனத்தகத்தே பாயாமற் போகாது. ஆத்மாவின் உருவம் ஒரு வட்டமே. வட்டந்தான் பூர்ணமான வடிவமாகும். அறிவே அதன் சுவரூபம். பரமாத்மைப போலவேதான் அதற்குச் சைதன்னியம் இருக்கின்றது. தன்னைப்போலவே உலகம் திகழவேண்டும் என்று ஆண்டவன் கருதுகிற காரணத்தால் உலகமும் அவன் நிழலாகக் காட்சி அளிக்கின்றது என்று சொல்லலாம். "பிருகிருதி matter) ஆத்மா, பரமாத்மா—இந்தத் தத்துவத்ரயங்கள். (—இந்த மூன்று உண்மைகள்—இல்லாத நாள் இல்லை. இவைகள் அநாதிகள். ஆத்மாவும் பிரகிருதியும் அவனுக்குச் சரீரமாய்த் திகழ்கின்றன என்ற வைணவ சித்தாந்தத்தின் சாயை பிளேட்டோவில் வீசுகின்றது என்று தைரியமாய்ச் சாற்றலாம். எப்படிப் பிறக்காத ஆத்மாவுக்குச் சரீரம் தோன்றிற்று? என்ற வினவுக்கு நாம் பதில் கூறமுடியாது திகைக்கின்றோம். அநாதி என்ற விடை வருகின்றது; ஆனல், அவ் விடையில் நம்முடைய அறியாமைதான் கோயில் கொண்டிருக்கிறது என்று உரைக்கலாம். பிரபஞ்சத்தின் தோற்றமும் மறைவும் அவனுடைய அலகிலா விளையாடல் கண்ட லீலைகள்—என்று இயம்புகின்றனர். கம்ப நாட்டாழ்வாரும்,

"உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்(டு)உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரணுங்களே."

என்று இசைக்கின்றார்.

தான் அசையாமல் நின்றுகொண்டு ஆண்டவன் உலகத்தை ஆட்டி வைக்கிறான். அவன் முன்னிலையில் அகில பிரபஞ்சமும் ஒரு பம்பரம் போலச் சுற்றுகிறது. இந்தப் பொருளில்தான் 'லீலை' என்ற சொல்லை நாம் உணர வேண்டும். உலகத்தை நடத்தி வைப்பதற்குக் காலத்தை அவர் படைத்தார். இந்தக் காலத்தை ஆண்டவனின் நடமாடும் உருவம் (a moving image of eternity) என்று பிளேட்டோ கூறுகின்றார். ஆகாயம் தோற்றுவதற்கு முன்பு பகலில்லை, இரவில்லை, நாட்களில்லை, மாதங்களில்லை. ஆண்டுகளில்லை. ஆகாயம் தோன்றினவுடனே, இவையாவும் பிறந்தன. காலத்தோடுதான் விண்ணும் தோன்றிற்று. விண்ணோடு காலமும் ஒரு காலத்தில் மறைந்துவிடும். ஆனால், ஒன்றும் அழிகிறதில்லை; எல்லாம் உருமாறுகின்றன.

புராணங்களில் காணப்படும் தெய்வங்களின் உற்பத்திகளை ஏற்றுக்கொண்டேதான் பிளேட்டோ பேசுகின்றார். ஓஷியானஸ், (Oceanus) டெதிஸ் (Tethys) இவ்விருவரும் மண்ணிற்கும் விண்ணிற்கும் பிறந்த குழந்தைகள். இவர்களிலிருந்து பார்க்கிஸ், (Phorcys) குரோனஸ் (Cronos) ரீயா (Rhea) முதலிய தெய்வங்கள் உதயமாயின. குரோனஸ், ரியா—இவர்களிடமிருந்து இஸ்ஸியூசும் (Zeus) ஹீரியும் (Here) பிறந்தனர். விராட் புருஷனிடத்தில் தேவர்கள், ரிஷிகணங்கள் எல்லாம் தோன்றின என்று நம் புராணங்களும் மொழிகின்றன. உற்பத்திக் கிரமத்தை ஆராயுமிடத்து, நம் நாட்டிலிருந்து இந்த முறை பிளேட்டோவை நண்ணியிருக்கக் கூடுமோ என்ற எண்ணம் நம் மனத்தே முளைக்கின்றது; அல்லது அவருடைய சிந்தனையில் இக் கருத்து தானே விளைந்ததோ? ஒன்றையும் உறுதியாய்ச் சொல்வதற்கு இடமில்லாமலிருக்கிறது. ஆனால், கருத்தொற்றுமையை நாம் கண்டு வியக்காமலிருக்க முடியாது.

நம் பொறிகளின் பயன்களைப்பற்றி பிளேட்டோ நவில்கின்றார். கண்களைப் படைத்ததின் நன்மை பேசப்படுகின்றது. விண்ணில் மீன கணங்களும், கோளங்களும் புரிகின்ற ஒழுங்கைக் கண்டு, நாமும் நம்மைத் திருத்திக்கொள்ளலாமன்றோ? செவிகளின் பயனையும் நாம் மறக்கக்கூடாது. ஓர் ஒழுங்கில் சமைந்து கிடக்கின்ற சங்கீதத்தைச் செவிகளால் பருகினால் நம் ஆத்மாவும் அறப்பாதையில் திளைக்கும் என்பதில் ஐயமில்லை. அதன் தெய்வகானத்தைக் குலைக்கின்ற உலகச் சந்தடிகள் யாவும் ஓர் அமானுஷ்யமான அமைதியில் தேய்ந்து, கரைந்துவிடும். இக் காரணத்தைக் கருதியே பிளேட்டோ சங்கீதத்திற்கு ஓர் உயர்ந்த இடத்தைத் தம் 'தூடியாசு' என்னும் நூலில் அளித்திருக்கின்றார். எல்லாம் ஒரு கணித முறையில் செல்லுகின்றன. கடவுளை ஒரு கணிதப் புலவனாகப் பிளேட்டோ நினைக்கின்றார். கணிதத்திற்குத் தம் கல்விச் சாலையில் சிறந்த இடம் அவர் நல்கியிருப்பதை எல்லோரும் அறிவார்கள். இப்பொழுது கணிதம் புகாத எந்த அறிவுத்துறையும் கிடையாது என்று கூறலாம். கடவுளின் நிலையைக் கணித முறையில் சித்திரிக்க முயன்று வருகின்றார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

மேலும் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு தன்னுளே அடக்கிக்கொள்ளும் பரமாத்மா மண், காற்று, தீ, நீர் முதலிய பஞ்ச பூதங்களின் தோற்றங்களாயிருக்க முடியாது. அது புலன்களுக்கு எட்டாத ஓர் உருவற்ற பரமாத்மாவாகத்தானிருக்கவேண்டும் என்று பிளேட்டோ கூறுகின்றார்.

ஒவ்வொரு விண்மீனும் ஓர் ஆத்மாவாகக் கருதப்படுகின்றது; அல்லது ஆத்மா உறைகின்ற இடமாகவும் கொள்ளலாம். அந்த ஆத்மா கர்மவசத்தால் கீழே இறங்குகின்றது. ஆனால், பண்டைய நினைவுகள் முற்றிலும் தேய்ந்து போகிறதில்லை. மீண்டும் அது தன்னுடைய தெய்வ நிலையை உணர்ந்து, தன்னுடைய தூய இடத்தை அடைந்து விடுகின்றது என்று பிளேட்டோ மொழிகின்றார்.

அவர் பிறவிகளைப்பற்றிச் சர்ச்சையும் செய்கின்றார். பெண்கள் கீழடைந்த நீசமான மனிதர்களே. ஆடவர்களைக் காட்டிலும் பெண்டிர்கள் கீழ்ப்பட்டவர்கள் என்று அவர் எண்ணுகின்றார். கோழை மனப் பண்புடையவர்கள் அடுத்த பிறவியில் பெண்களாய்ப் பிறப்பார்கள். கவலையற்று உல்லாசமாய்க் கட்புலனை கொண்டு விண்ணை அளக்க முயல்வோர்கள் வேறு பிறவியில் பறவைகளாய்த் தோன்றுவார்கள். மயிர் வளர்வதற்கு பதிலாகச் சிறகுகள் முளைக்கின்றன. அறிவை வளர்க்காமல் விலங்குணர்ச்சி வலையில் சிக்கியவர்கள் மிருகங்களாய்ப் பிறப்பார்கள். மிகவும் மாசுற்றவர்கள்—சிறிதும் அறிவொளி இல்லாதவர்கள்—நீர் வாழும் மீன்களாய்த் தோன்றுவார்கள். அவரவர் மனப் பண்பாட்டிற்கேற்றவாறு பிறவிகள் அமைகிறன என்று பிளேட்டோ கூறுகிறது, நாம் கொண்ட தத்துவத்தையும் நினைவூட்டுகின்றதன்றோ?



பிரயாணி :—என்னாய்யா! இந்த வக்கீலு மூணுபேர் நிக்கற எடத்துலே ஒத்தர் நிக்கறாரு.

சாயபு :—(மற்றொரு பிரயாணி) அவரு மூணு குடும்பத்தே காப்பாத்தற வக்கீலு. அதுனாலே மூணு பேர் எடத்துலே ஒத்தர் நிக்கறாரு.

# கிருஹலக்ஷ்மி

(கன்னட நாவல் சுருக்கம்)

மூல எழுத்தாளர்: **ஸ்ரீமான் அ. நா. கிருஷ்ணராவ்.**

மொழிபெயர்ப்பாளர்: **ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்.**

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ருக்மிணியின் கலியாண சம்பிரமமும் தடபுடலும் ரங்கம்மாள் வீட்டுக்குள்மட்டுமே அடங்கிஇருக்கவில்லை; அந்த ஊர் முழுவதிலும் பரவிவிட்டது. லக்ஷ்மணராவ் பதினைந்து நாள் முன்னதாகவே குடும்பசமேதராய் வந்து புட்டசோமனஹள்ளியில் நிலைத்துவிட்டார்.

கிருஸ்மஸ் விடுமுறையாக விருந்ததால் பள்ளிக்கூடக் கட்டிடம் கிடைத்தது. அவ்விடத்திலேயே சம்மந்திப்பெயர்களை இறக்குவதென்று ஏற்பாடாயிற்று.

கரீம் பந்தல் போடும் வேலையை ஒப்புக்கொண்டான். அவன் போட்ட பவ்யமான பந்தல் ரங்கம்மாளின் வீட்டிலிருந்து தெருவுபூராவும் வியாபித்திருந்தது. பள்ளிக்கூடத்து முன்புறமும் ஒரு பந்தல் போடப்பட்டது. ஊரின் முன்புறத் தோட்டத்தை வாங்கிக்கொண்டிருந்த கிட்டப்பா கலியாணத்துக்கு வேண்டிய தேங்காய் இளநீர் எல்லாம் கொண்டுவந்து கொடுத்தான். ராயரின் கவுண்டர்மார்கள் அரிசி சப்ளை செய்தார்கள். அவர்கள் வீட்டுப் பெண்கள் (கலியாண) வீட்டுக்காரியங்களை கவனித்தனர். எங்கிருந்தெல்லாமோ பழம், கறிகாய், புஷ்பம், வாழை இலை, வெற்றிலை எல்லாம் வந்து குவிந்தன!

வரபூஜை யன்று வெடியற்காலமே பெங்களூரிலிருந்து சாமாராவ் குடும்ப சமேதராய் வந்துவிட்டார். அவர் பெங்களூரிலிருந்தே பன்னிரெண்டு காஸ்லைட்டுகள் ஏற்பாடு செய்துகொண்டு வந்துவிட்டார்.

பிள்ளை வீட்டார் ஸ்பெஷல் பஸ் ஏற்படுத்திக்கொண்டு மாலை ஐந்து மணிக்கு வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் பலாகாரம் வழங்கப்பட்டு, ஊர்வலத்துக்கு ஏற்பாடுகள் நடந்தன. வைபவமாக வரபூஜை ஊர்வலம் நடைபெற்று, சாஸ்திரங்களும் நடைபெற்றன. பிறகு, சம்மந்திகள் மாத்திரமின்றி ஊரில் உள்ளவர்கள் அனைவருக்குமே விருந்து நடந்தது.

மறுநாள் கலியாண முகூர்த்தம். பெண்ணின் புறம் லக்ஷ்மணராவும் அவருடைய மனைவியும் தாரை வார்க்க மணையில் உட்கார்ந்தார்கள். ரங்கம்மாள் மகளுக்கு வீட்டில் உள்ள கொஞ்சம் நஞ்சம் பொன்னுடன் கூடச் சிறிது

183203

பௌன் வாங்கிப்போட்டு காசுமாலை, குண்டுமணி மாலை, கைக்கு நாலு ஜதைவளை, காதுக்கு வைரமும் சிகப்பும் கலந்தத்தோடு (கம்மல்), இடுப்புக்கு தங்க ஒட்டியாணம் செய்து பூட்டி சாலங்கிருத கன்னிகாதானம் செய்தாள்.

ஜயராவ்தம் ஏழ்மையை மறந்து நாட்டுப் பெண்ணுக்கு ஒரு ஜதை வளை, இரண்டு இழை தங்கச் சங்கிலி செய்வித்துக்கொண்டு வந்திருந்தார்.

கலியாணம் வைபவமாக நடைபெற்றது. சம்மந்திகளுக்கும், சம்மந்திகளின் கிட்டிய உறவினர்களுக்கும் யோக்கியமான மரியாதை (சன்மானம்) செய்யப்பட்டது. எவ்வித மனத்தாங்கலுமின்றி கலியாணம் இனிதே நடைபெற்று, சம்மந்திகள் திருப்தியுடன் ஊருக்குக் கிளம்பினர்.

ரங்கம்மாளை ஊரே புகழ்ந்தது. கணவனின் மறைவு, கடன் உடனின் தொந்தரவு, பிள்ளைகளின் கனிகரமற்ற மனப்போக்கு எல்லாவற்றையும் பொறுமையுடன் தாங்கியவளாய் இவ்வளவு வைபவமாகக் கலியாணம் செய்தது அதிசயம்தானே என்று எல்லோரும் புகழ்ந்தார்கள்.

ஜயராவ் கலியாணத்தை முடித்துக்கொண்டுஊர்போய்ச் சேர்ந்த இரண்டு வாரங்களுக்குள்ளாகவே ரிடைர்மென்ட் ஆர்டர் வந்தது. அமல்தார் அவரை அழைத்து, "நீங்கள் போய்விட்டால் என் கை ஒடிந்த மாதிரியாகிவிடும். நீங்கள் ஒரு விண்ணப்பம் எழுதிக்கொடுத்தால் எக்ஸ்டென்ஷன் கொடுக்கச்சொல்லி சிபார்சு செய்கிறேன். உங்கள் பையனின் படிப்பு நடைபெறவேண்டும். பெண்ணுக்குக் கலியாணம் ஆகவேண்டும். கையிலிருந்ததை யெல்லாம் பிள்ளையின் கலியாணத்துக்குச் சிலவழித்து விட்டிருக்கயள்.இரண்டொரு வருஷம் வேலையில் இருந்து கொண்டு பிள்ளைக்கு ஒரு உத்தியோகத்தைப் பார்த்துக் கொடுத்துவிட்டு நீங்கள் ஓய்வு எடுத்து கொள்வது நல்லதென்று எனக்குத்தோன்றுகிறது" என்றார்.

"தங்களுடைய அன்புக்குப் பதில் சொல்ல என் நா எழவில்லை. கர்மபந்தனம் நாம் பலவீனமாக இருக்கும் அளவும் நம்மை இம்சிக்கத்தான் செய்யும். ஒரு தடவை மனதை உறுதிசெய்துகொண்டுவிட்டால் நம்மை அண்டாது. என்பையன் புத்திசாலி; சத்தியவான். பகவான் அவனுக்கு ஒருவாய் சாப்பாட்டுக்குக் குறைவைக்கமாட்டான் என்பது என் நம்பிக்கை. மனத்தாங்கலின்றி என்னை அனுப்பிக் கொடுங்கள்" என்று ஜயராவ் வினயமாக வேண்டிக் கொண்டார். அமல்தாருக்கு வேறுவழி தோன்றவில்லை.

உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றதும் ஜயராவுக்கு சிறைச்சாலையிலிருந்துவிடுதலை கிடைத்ததுபோல் ஆயிற்று. புதிதாகக் கிடைத்த சுதந்திரத்தை ஈடுபடுத்திகொள்வது அவருக்கு சிரமமாகத் தோன்றிற்று. தினந்தோறும் எட்டு மணி தேசாலத்துக்குக் குறையாமல் ஆபீஸில் காலம் கழித்துக் கொண்டிருந்தவருக்கு தற்சமயம் அந்த எட்டு மணிப் பொழுதைத் தோளில் சுமந்துகொண்டிருப்பது போல் இருந்தது!

ஜயராவின் நிலைமையை அறிந்து அச்சுதப்பா ராம லிங்கையாவை 'மஹாபாரதம்' படித்து காண்பிக்கச் சொல்லித் திறமையுடன் புதிரை விடுவித்தார். காலையில் ஆஞ்சனேயர் கோயிலிக்குப் போய் சேவித்துவிட்டு வந்த பிறகு சாப்பாட்டு நேரம்வரைக்கும் நண்பர்கள் மூவரும் பாரத படனத்தில் லயித்துவிடுவார்கள். பகல் போஜனம், ஓய்வு; பிறகு இரவு வரையிலும் பாரதபடனம் நடைபெறும்.

கலியாணமான அடுத்த வருடமே மாதவன் மெட்ரிக் யுலேஷன் பரீக்ஷைக்கு எழுதினன். அவன் பரீக்ஷையில் தேர்ச்சி பெறுவதில் யாருக்குமே சந்தேகமில்லை.

கலியாணத்துக்குப் பிறகு பிள்ளையார்சௌதிக்கும் தீபாவளி பண்டிகைக்கும் மாதவன் மாமனர் வீட்டுக்கு போய் வந்தான். கலியாணத்திலோ மனைவியின் முகத் தைக் காணவே அவகாசம் கிடைக்கவில்லை. பிள்ளையார் சௌதிக்கு மாமனர் வீட்டுக்குப் போனபொழுது, முதல் கடமையாக மனைவியின் முகத்தைக் கண்டு மகிழ்ந்தான். மனைவியுடன் பேசுவதென்ன வென்று தெரியவில்லை. ருக்மிணியோவெனில் அறியாப்பெண்.

பிள்ளையார் பண்டிகை முடித்துக்கொண்டு (கன்னடக் காரர்கள் பெண்ணுக்குக் கலியாணமான வருஷம் இந்தப் பண்டிகைக்கு மாப்பிள்ளையை அழைத்து மரியாதை செய் வது வழக்கம்) புது வேஷ்டி கட்டிக்கொண்டு தன் ஊருக்குத் திரும்பிய பிறகு மாதவன் உள்ளம் உருகினன்.

நான் ஏன் இப்படி அசட்டுக் காரியம் செய்தேன்! அவளைப் பேசவைக்காமலேயே வந்துவிட்டேனே!" என்று தன் அசட்டுத் தனத்துக்காகப் பச்சாதாபப்பட்டான்.

தீபாவளிக்கு அழைப்பார்கள் என்று மாதவனுக்குத் தெரியாதா! அப்பொழுதாவது ருக்மிணியைப் பேசவைக்க வேண்டும் என்று இரவும் பகலும் எண்ணிக்கொள்வான்.

தீபாவளியும் வந்தது. மாதவன் மாமனர் வீட்டுக்குப் போனன். ருக்மிணியின் தரிசனமும் கிடைத்தது. ஆனல் பேச நா எழவில்லை. "இதென்ன வந்தது எனக்கு" என்று

தன்னைத்தானே கண்டித்துக்கொண்டான். மறுநாள், பெண்ணும் மாப்பிள்ளையும் சுதந்திரமாக இருக்கட்டும் என்று ரங்கம்மாள் ராமுவையும் அழைத்துக்கொண்டு எவ்விடத்துக் காவது போய்வருவது என்று நிச்சயித்துக்கொண்டாள். ருக்மிணிதான் காப்பி போட்டுக்கொண்டு வரவேண்டிய தாயிற்று. மாப்பிள்ளைக்குக் கேட்கும்படி ரங்கம்மாள் போகிற வாக்கில் "நான் வருவதற்குக் கொஞ்சம் நாழிகை யாகும். அகமுடையானுக்கு நீயே காப்பி போட்டுக் கொடு" என்று சொல்லிவிட்டுப் போனாள்.

ருக்மிணி காப்பியைக் கொண்டுவந்து ரூமின் மேஜை மேல் வைத்து விட்டுத் தாவி ஓடுவதில் இருந்தாள். மாதவன் மெதுவாக.

"ரங்கம்மாள் எங்கே போயிருக்கா?" என்றுகேட்டான்.

ருக்மிணியின் முகம் சிவந்தது. நெற்றியில் வெயர்வை மணி மணியாகத் துளித்தது.

"நீதான் காப்பிப் போட்டாயா?"

ருக்மிணி பதில் சொல்லவில்லை.

மாதவன் காப்பியை எடுத்து ருசி பார்த்து விட்டு, "ஜோராக இருக்கு; நன்றாகச் சமைப்பாயாம்!"

'உங்களுக்கு யார் சொன்னார்கள்?" என்று கேட்க வேண்டும் என்று ருக்மிணியின் உள்ளம் உந்திற்று. கணவனின் வாய் மூலம் கேட்ட நல்ல வார்த்தை அவளை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தது.

மாதவன் கேட்கும் கேள்விகளுக்கு ருக்மிணி அமரிக்கையாக பதில் அளித்து வந்தாள்.

பிறகு மாதவன், "கலியாணத்துக்குப் பிறகு நாம்பேசுவது இதுதான் முதல் தடவை" என்றான்.

ருக்மிணிக்கு வெட்கி தலை குனிந்தது.

"நாம் பேசட்டும் என்றுதான் உங்கம்மா வெளியே போனது!"

ருக்மிணிக்கு ரொம்ப வெட்கம் ஏற்பட்டது.

மேலேஎன்னபேசுவதென்று மாதவனுக்குத் தோன்றவில்லை. மேஜை மேலிருந்த வெங்கல கிருஷ்ணவிக்கிரஹத்தை கையில் எடுத்துகொண்டு பார்த்தபடியே "விக்கிரஹம் எவ்வளவு நன்றாகவிருக்கு! உங்கப்பா வாங்கிக் கொடுத்தாரா?

"இல்லை ஆச்சாரியர் தீர்த்த யாத்திரை போயிருந்தார். வரும்பொழுது கொண்டு வந்து கொடுத்தார்."

"கிருஷ்ணனைக் கண்டால் உனக்குரொம்பஆசையா?"

"கிருஷ்ணனைக் கண்டால் யாருக்குத்தான் ஆசை யாகாது?"

"ராமாயணம், பாரதம், பாகவதம் எல்லாம் படித்திருக் கிருயாம்!"

"யார் சொன்னூர்கள்?"

"எங்காத்தில் தினமும் உன்னைப்பற்றிய பேச்சுதான். நாட்டுப் பெண்ணை சீக்கிரம் அழைக்கவேண்டும் என்று அம்மா நச்சரிக்கிருள். சீக்கிரம் வரவேண்டி இருக்கும்.

ருக்மிணியின் முகம் சுருங்கிற்று.

"பிறந்தகத்தை விட்டுப் பிரியவேண்டுமே என்று துக்கமா?"

"ஆமாம். ஆனல்....

"என்ன, ஆனல்? சொல், சங்கோசப்படதே?"

"நீங்கள் சிரிப்பயள்"

"இல்லை, சொல் ருக்கூ"

"கணவரை சேவிக்காத பெண் ஜன்மம் பயன் படாது"

"அப்படிச் சொன்னது யார்? உங்கம்மாவா?"

"அம்மாவும் சொன்னுள். எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது."

"ருக்கூ, நான் ரொம்ப ஏழை. என் தகப்பனரும் ஏழை.'நீ ராஜகுமாரியைப் போல் வளர்ந்தவள்."

"அப்போ நாங்களும் ஏழைகள்தான்."

"உங்கப்பா ராஜா மாதிரி இருந்தார். உங்களையெல் லாம் தங்கத்தொட்டிலில் விட்டு வளர்த்தார்"

"அப்பா ஒரு வார்த்தை சொல்வார். சொல்லட்டுமா?

"கட்டாயம் சொல்,"

"ஏழ்மை, ஐசுவரியம்...இதெல்லாம் சாசுவதமில்லை. மனிதனின் குணத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டுமே தவிர அவனுடைய பணத்துக்கில்லை. குஹனும், விதுரனும் ஏழைகள். ராவணனும், துர்யோதனனும் சக்கிரவர்த்தி களே....இதில் பெரியவர்கள் யார்?

"உன் புண்ணியத்தால் எங்கள் வீடு பொன்னுகப் போகிறது என்கிருள் எங்கம்மா!

"அவர் எவ்வளவு நல்லவர்"

"ஆமாம், உண்மை. அவள் ஒரு நாளாவது ஒருத்தரைப்பற்றிக் கெட்டவார்த்தை பேசினதில்லை. அப்பா சம்பாதித்துவந்த முப்பது....நாற்பது ரூபாயிலேயே மிக சந்தோஷமாகக் குடித்தனம் செய்வாள். ஒரு நாளாவது புடவைக்கும் நகைக்கும் ஆசைபட்டவள் இல்லை. இம்'ருக்கூ! எனக்குக் கடிதம் எழுதுவே இல்லையா?

"எழுதுகிறேன்—என்ன எழுதட்டும்?"

"எனக்கென்ன தெரியும்?" "நீ பதில் போடுவாயா?


"எனக்கு நன்ருக எழுதத்தெரியாது; தவறுகள் ஏற்படலாம். நீங்கள் சிரிப்பயள்."

"தேவலை. உனக்கு வந்தபடி எழுது"

"அப்படியே ஆகட்டும்."

வாசல்புறம் ரங்கம்மாளின் பேச்சுக் குரல் கேட்கவே "அம்மா வந்து விட்டாள்." என்று ருக்மிணி மின்னலைப் போல் மாதவன் பாதங்களில் பணிந்து ஓடிவிட்டாள்.

---




பிரயாணி:—எம்பா! இந்த ஊரிலே பள்ளிக்கூடம் இருக்கா?

வண்டிக்காரன்:—எம்மா! நீ போய் படிக்கப்போறியா? ஐயா... சாமி...! டிச்சவங்களுக்கே வேலை இல்லே ...

# காவிதாஸர் கனவு

## 8. உமாப்ரஸாதம்...குமாரஸம்பவம்

[ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

பரமசிவனுடைய கட்டளையை முருகக் கடவுள் மன முவந்து பக்தியுடன் சிரமேற்கொண்டார். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற உணர்ச்சியுள்ளவர்கள் தந்தையின் உத்தரவை நிறைவேற்றுவதே சிறந்த தர்மமென்று கருதுவார்கள். இதைக் கண்டு அன்னை உமாதேவியும், மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தாள். வீரனைப் பெற்றெடுத்த தாய்க்கு மக னுடைய வீரத்தைக் காண்பதில் உள்ள இன்பத்திற்கு எல்லையு மில்லை, உதாரணமுமில்லை. உமாதேவி தனனுடைய ஆனந்தக் கண்ணீரால் முருகனுக்கு ஸேனாபதியாக அபிஷேகம் செய்வித் தாள். உடனே குமாரசுவாமி பரமசிவனையும், உமாதேவியையும் வலம் வந்து வணங்கி அவர்களுடைய அருளையும் ஆசியையும் பெற்றுத்தேவர்களுக்கு வெற்றியை அளிக்கத்தேவேந்திரனுடன் சென்றார்.

பிறகு நக்ஷத்திரங்கள் நடுவில் சந்திரன் விளங்குவதுபோல் தேவர்களுடைய பெரும்படையின் நடுவில் நடுநாயகமாகக் குமார சுவாமி பிரகாசித்தார். தாரகாசுரனை நினைத்து அச்சமடைந்த அவர்களுக்கு அவர் வீரமொழிகளைக் கூறி அபயமளித்தார். இந்திரன தெய்வீகமான பீதாமபரத்தால் அவரைச் சிங்காரித் தான. பிரம தேவன் அவரைத் தழுவி முத்தமிட்டு ஆசி கூறி னார். கந்தர்வ வித்தியாதர சித்த கணங்கள "ஜய.விஜயீ பவ" எனறு கட்டியங் கூறினார்கள். ரிஷிகள் யாவரும் அவருக்கு வெற்றி ஏற்படும்படி ஆசீர்வாதம் செய்தார்கள்.

குமரக் கடவுளும் உமாதேவியார் அளித்த சக்தி என்ற வேலாயுதத்தைக் கையிலேந்தி ஆகாய கங்கைக் கரையை அடைந் தார். முற்காலத்தில் தெய்வப் பெண்மணிகள் அந்தக் கங்கையில் ஸ்னானம் செய்வது வழக்கமாக இருந்தாலும், தாரகாசுரன், அமரா வதி என்ற இந்திரனுடைய தலைநகரத்தைக் கைப்பற்றி தேவர் களை அவ்விடமிருந்து வெருட்டிய பிறகுதெய்வப்பெண்கள் அங்கே வருவதே கிடையாது. கார்த்திகேயரைக் கண்டவுடன கங்கா தேவி களித்தாள். கங்கையைக் கண் குளிரக் கண்டு கங்கைத் தண்ணீரின்மேல் வீசியக் காற்றின குளிர்ச்சியை அனுபவித்து குமரக் கடவுள் மிகுந்த மகிழச்சியை அடைந்தார். இந்திர னுடைய நந்தவனத்தையும், கற்பக மரங்களையும், அமராவதி நக ரத்தையும் கண்டு, அவைகளைப் பாழாக்கிய தாரகாசுரனைக் கண்டு மிகுந்த சினங்கொண்டார்:

பிறகு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் மூல புருஷரான கசியப ரிஷியை வணங்கினார். தேவாகளின் தாயான அதிதி

தேவியையும் வணங்கினார். இந்திராணி தேவியையும் வணங்கினார். அவர்கள் எல்லோருடைய ஆசிகளையும் பெற்றார்.

பிறகு விஜித்வரம் என்று மிகப் பொருத்தமான பெயருள்ள பெரிய தேரில் ஏறி அளவற்ற தேவசேனைகளுடன் குமாரக்கடவுள் வெகு வைபவத்துடன் போர்க்களத்துக்குச் சென்றார். அவர்மேல் ஒரு ஒளி வீசும் தங்கக் குடை பிடிக்கப்பட்டது. சந்திரனைபோல் வெண்மையான சாமரங்கள் அவருடைய இரு பக்கங்களிலும் வீசப்பட்டன. ஐராவதம் என்ற தெய்வ யானையில் ஏறி இந்திரன் அவர் பின் சென்றான். அக்கினி, வாயு, வருணன், யமன், குபேரன், ருத்திரன் முதலிய லோகபாலக தேவர்களும் சென்றார்கள். பேரிகை, துந்துபி முதலிய போர் வாத்யங்கள் முழங்கின.

அந்தப் தேவர்களுடைய பெரும்படையை, தாரகாசுரன் அதைவிட மிகப் பெரிய படையுடன் எதிர்த்தான். அப்பொழுது ஏற்பட்ட பெரும் போர் உலகத்திற்கே ஊழிகாலம் போல் தோன்றிற்று. ஆனால் அசுரப் படைகள் உள்ள இடத்தில் பல அபசகுனங்கள் தோன்றின.

அச்சமயத்தில் மிகக் கடுமையான பெரும்போரை குமரக் கடவுள் தாரகாசுரனுடன் செய்தார். அவன் எய்த ஒவ்வொரு அஸ்திரத்தையும் ஒருயோகி அஷ்டாங்க யோக மகிமையால் சம்சாரத்தை வெல்லுவதுபோல் வென்றார்.

யோகிவ யோக விதி சுஷ்கமனு யமாத்யை :
ஸாம்ஸாரிகம் விஷயஸங்கமமோக வீர்யம். (17, 47)

பிறகு பயங்கரமான கத்தியை கையில் ஏந்தித் தேரிலிருந்து கீழே குதித்து தாரகாசுரன் ஓடி வரவே குமாரக் கடவுள் சக்தியாயுதத்தைப் பிரயோகித்து அவனைச் சங்கரித்தார். தேவர்கள் எல்லோரும் களித்துப் பூமாரி பொழிந்தார்கள். உலகமெல்லாம் ஆனந்தமடைந்தது. யாவரும் குமாரக் கடவுளைப் போற்றி வணங்கி வாயாரத் துதி செய்தார்கள். தேவேந்திரன் மறுபடியும் சுவர்க்கலோக ராஜ்யத்தைப் பெற்றான்.

இப்படி குமாரசம்பவம் என்ற அற்புத மகா காவ்யத்தின் ரஸமயமான இடங்களை நன்கு விளக்கிக் காளிதாசர் என்னிடம் கூறினார்: "குமாரதாஸா! இப்படி வீரனை மகனுடைய பிறப்பால் தான் மணம பயனடைகின்றது. கடவுளுடைய அருளையடைய அனபும் தவமும்தான வழியாகும். தீயவர்களை யடக்கி நல்லவர்களைக் கடவுள் காத்தருள்வார். இநத உயர்ந்த நோக்கங்கள தான் நம்முடைய தாய்நாட்டிற்கும், அதின ஒப்பற்ற நாகரீகத்திற்கும் உயிர்நிலைகள். அவைகள இந்நாட்டில் விளங்குமவரையில் அதற்குத் தாழவே வராது. இந்த நாடு தெய்வீகம பொருந்திய நாடு (தேவதாத்மா). இந்த நாட்டின பண்பாட்டால் உலக நாகரீகங்களை நாம் அளக்க வேண்டும. அந்த நாகரீகந்தான எல்லா நாகரீகங்களுக்கும அளவு கோலாகும". (ஸ்துதி : பருதிவ்யா இவ மான தணட :)

(தொடரும்)

# மூட்டைக்கார முனுசாமி

உலகத்தில் உள்ள உத்யோகங்கள் எல்லாவற்றிலும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகம் பள்ளிக்கூடத்து வாத்தியார் என்பதுதான் என் தீர்மானம், ஏனென்று கேட்கிறீர்களா? "ஏணிதோணி கிச்சிலிக்கா" என்ற பழமொழி வாத்யார்களுக்குத்தானே பொருந்தும். ஏணிமேலே ஏறுபவன். எத்தனையோ மேலே ஏறிபோகிறான். தோணியில் ஏறுபவன் எத்தனையோ ஆறுகளைக் கடந்து போகிறான். பஞ்சபக்ஷபரமான்னத்தோடு ஒரு கிச்சிலிக்காய் ஊறுகாய் சாப்பிட்டால் மற்றவைகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஜீரணித்துவிடும். ஆனால் இந்த கிச்சிலிக்காய் மட்டும் தொண்டையிலேயே இருப்பதுபோல், வாத்தியார் ஆயிரக்கணக்கான பிள்ளைகளை மேல்வகுப்புகளுக்கு அனுப்பியபோதிலும் அவர் மட்டும் "யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி" என்று அதே வகுப்பில் ஸ்திரயோக ஸ்திர லக்னத்தில் உட்கார்ந்திருக்கும் பாக்கியசாலியல்லவா? அதில் நானும் ஒருத்தன்.

பிள்ளைகளுக்கு நன்றாகப் படிப்புச் சொல்லிக்கொடுத்து மேல் வகுப்புக்கு அனுப்புவது மட்டுந்தான் வாத்தியார் பொறுப்பு என்று எண்ணியிருந்தேன். ஆனால் அந்த வேலைக்கு வந்த பிறகுதான், அந்த வேலையில் எத்தனை கஷ்டங்கள் இருக்கின்றன என்பது தெரிந்து, யானையாய் இருந்தமனிதன் பூனையாய் ஆய்விட்டேன். பள்ளிக்கூடத்து பரீக்ஷை முடிந்தாலும் முடிந்தது. மக்குப்பிள்ளைப் பெற்றிருக்கிற தகப்பன்மார்கள் வந்து,' 'ஸார்! கொஞ்சம் மார்க் கவனிச்சு பையனை அப்படி தூக்கிடுங்கோ' என்கிறார்கள். ஆனால் புத்திசாலி பசங்களுடைய தகப்பனர்கள் "என் பையன் பாஸ்பண்ணிட்டானேன்னு ஒருபூசணிக்காயாவது வாங்கித்தராளா!" அதுவும் இல்லை. குப்பத்தொட்டி எலக்ஷலே பணக்கார பிள்ளைகளொட அப்பால்லாம் நிக்கறாளாம். அவா வந்து,'ஸார்! உங்க வகுப்பிலுள்ள பிள்ளைகளுடைய தகப்பனர் எல்லாரையும்எனக்கு ஓட்டுப்போடச் சொல்லுங்கோ. எலக்ஷனுக்காக போடற மீட்டிங்கிலேயும் நீங்க வந்து பேசணும், பிரசாரம் பண்ணணும்" என்று கேட்கிறார்கள். இதுக்கெல்லாம் நான் மசிஞ்சிடுவேனா?

ஆனால், எனக்கு ஒரு வாக்கு கொடுத்ததாலே நான் மூட்டைக்கா முனுசாமிக்கு வேலை செய்தேன். அவர் என்னவாக்குக் கொடுத்திருந்தார் தெரியுமா....என் குழந்தைக்குஇப்போதுதான் 27வயசாகிறது.முனுசாமிஎலக்ஷனிலே ஜெய்ச்சுட்டார்னா அவளுக்கு வரதக்ஷிணை வாங்காத ஒரு பையனை பார்த்து தரேன்னு சொல்லியிருந்தார்.

அதை நம்பி நான் அவருக்காக வேலைசெய்தேன். அதுக்காக எப்படி மேடை பிரசங்கம் செய்வது? வாய் பிர

# கல்பனா பரிணயம்

**சோபனா:**—கல்பனா! நானும் அரைமணி நேரமா பாக்க றேன் நீ, நான் வந்ததைக்கூட கவனிக்காமெ அப்படியே சித்திரம் எழுதுவதிலேயே மூழ்கிப் போய் இருக்கிறதை. அப்படி என்ன! என்னிக்குமில்லாத சிரத்தை இன்னிக்கி. இதுக்குள்ளே ஏதோ விஷயம் இருக்கு....அது என்னன்னு சொல்றயா?....ஓஹோ! எனக்கே புரிஞ்சுடுத்து....

**கல்பனா:**—என்ன சோபனா புரிஞ்சுடுத்து!....

**சோபனா:**—என்ன தெரியுமா? உங்க காலேஜிலே சோஷியல் வெல்பேர்க் (Social welfare) காக நாடகம் போட்டு உதவப் போறங்கோ, அதுக்காக போடுகிற "உஷா பரிணயம்" என்ற நாடகத்திலே கல்பனா தேவி அவர்கள் சித்திரலேகாவாக நடிக்கப் போகிறார். அதற்கு இங்கு ஒத்திகை நடந்துக் கொண்டிருக்கிறது. என்ன........ நான் சொல்வது சரிதானே....

**கல்பனா:**—பரவாயில்லையே! சரியாகச் சொல் லிட்டையே...சரி....அதிருக்கட்டும். நான் ப்ராக்டிஸ் செய் வது என் வீட்டிலேயே யாருக்கும் தெரியாது....நீ என் ப்ரெண்ட்ஸ் கிட்டேல்லாம் தபட்டை அடிச்சுடாதே. எல் லார்கிட்டேயும் ப்ராக்டிஸே பண்ணலேன்னு சொல்லி.... மேடையிலே பிரமாதமா நடிச்சு எல்லோரையும் ப்ரமிக்க வைக்கப்போறேன்....நீயும் ட்ராமாவுக்குக் கட்டாயம் வா....

**சோபனா:**—சரி கல்பனா! இப்போ நீ எழுதிண்டு இருக் கையே அது என்ன படம்?

**கல்பனா:**—பூ இது தெரியல்லையா? வேணும்னு தெரி யாத மாதிரி கேக்கறையா?.... விளையாடாதே சோபனா. மயில் கொண்டை, கிரீடம், நகை இதெல்லாம் பார்த்தாலே உனக்கு க்ருஷ்ணன்னு தெரியலே....

**சோபனா:**-ஹி....ஹி....ஹி....இது க்ருஷ்ணனா. க்ருஷ்ணன் கணக்க உயிரோடே இருந்து இந்தப் படத்தைப் பார்த் தால் முதலில் இதுக்கு தீ வெச்சுட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார். க்ருஷ்ணன் மூஞ்சியிலே இருக்கிற தெய்வக் களை இந்தப் படத்திலே ஒரு மூலையிலே கூட இல்லே. அது எங்கையோ மரத்திலே போயி ஒட்டிண்டுடுத்து. மனுஷன்

---

சாரம் செய்வது, வாக்காளர்களை எந்த முறையில் சேர்ப் பது என்பதைப்பற்றி எல்லாம் நான் மூட்டைக்கார முனு சாமியிடமே கற்றுக்கொண்டு உழைத்தேன். எலக்ஷனின் முடிவு என்ன தெரியுமா?...பெரிய பூஷணிக்காய் காய்த்து விட்டதால் எனக்கும் பெரிய கோழி முட்டையைக் கொடுத் துத் தன் பெயரை ஸ்திரமாக்கிக் கொண்டார்.

களேதான் பூரா....பூரா தாண்டவமாடுகிறது. அதுவும் மனுஷகளேயிலேயும் யாருடையது....தெரியுமா ?....

**கல்பனு**: - யாருடையது சொல்லேன்...என்னவோ பிரசங்கம் பண்ண ஆரம்பிச்சுட்டையே.

**சோபனு**:—யாருடையதா ?.... சொல்லட்டுமா....கோவிச்சுக்கமாட்டையே....வந்து....அது... சு—கு—மா—ர—

**கல்பனு**:—(சோபனுவின் வாயைப் பொத்தி) சோபனு! உரக்கச் சொல்லாதே. நீ என்னே கேலி செய்யவா இங்கு வந்திருக்கிருய்? போதும் உன் பேச்சு. உனக்கு எப்படி இந்த விஷயம் தெரிந்தது? முதலில் அதைச் சொல்லு;

**சோபனு**:—எனக்கு இந்த ரகசியம் தெரியாது என்று இத்தனே நாளாய் நீ நினேத்துக் கொண்டிருந்தாய். எனக்கு எப்பவோ தெரியும்....

**கல்பனு**:—யாருக்குத் தெரிஞ்சு என்ன பலன்? 'முடவன் கொம்பு தேனுக்கு' ஆசைப்படுவது போல்தான்.... என்று முடிப்பதற்குள்,

சோபனு குறுக்கிட்டு, 'என்ன கல்பனு! அப்படி சொல்லிவிட்டாய்? சுகுமாரனுக்கும் உன்னேப் பிடித்திருக்கிறது. உனக்கும் அவனே....

**கல்பனு**:—யாருக்குப் பிடித்தால் என்ன? பல பெண்களின் வாழ்க்கையைப் பாழ்படுத்தியுள்ள 'வரதக்ஷிணே பூதம்' எங்கள் இருவர்க்கிடையே நிற்கிறது. சுகுமாரனின் பெற்றோர்கள், அவன் மேல்நாடு எல்லாம் சென்று நன்ருகப் படித்துப் பட்டம் பெற்று நல்ல உத்தியோகத்தில் இருப்பதால் 10,000 ரூபாய் வரதக்ஷிணேயைக் கீழே வைத்தால் கல்யாணப் பேச்சு. இல்லாவிட்டால் போய்விடலாமென்று தீர்த்துச் சொல்லுவிட்டார்கள். அவ்வளவு கொடுக்க எங்களுக்குச் சக்தி ஏது?.... என்றவாறு ஒரு பெருமூச்சுவிட்டாள்.

**சோபனு**:—அட பயித்தியமே! உனக்கு ஒரு விஷயமும் தெரியாதா? உனக்கும் சுகுமாரனுக்கும் அடுத்த வாரம் 'நிச்சயதார்த்தமாமே.' உன் அப்பா சொல்லவில்லேயா?....

**கல்பனு**:—அட போடீ! என்ன உளருகிருய். கனவு.... கினவு கண்டயான்ன?

**சோபனு**:—என்ன கல்பனு! இப்படி சொல்கிருய். கல்யாணப் பத்திரிகைகூட எங்கள் ப்ரஸ்ஸில்தான் ப்ரிண்டாகப்போகிறது.

**கல்பனு**:—நிஜமாகவா !....உனக்கு இந்த விஷயத்தை யார் சொன்னது? இரண்டு நாட்கள் முன்பு கண்டிப்பாகக் கூறியவர்கள் இப்போது எப்படிச் சம்மதித்தார்கள்?.... இந்த விவரம் எல்லாம் உனக்குத் தெரியுமா? சொல்லேன்'—என்று சொல்லிக்கொண்டே தன்னேயும் மறந்து சோபனுவைக் கட்டிக்கொண்டு விட்டாள்.

**சோபனா:**—'கல்பனா! என்னை விடேன். விவரம் பூரா எனக்குத் தெரியும். சொல்கிறேன் கேள்'—என்றவுடன் தான் கல்பனா அவளை விட்டாள். பிறகு இருவரும் நாற்காலியில் உட்கார, சோபனா சொல்ல ஆரம்பித்தாள்.

'உன் அப்பா உங்க பிரின்ஸ்பாலை ஒரு சமயம் சந்திக்க நேர்ந்ததாம். அப்போது பிரின்ஸ்பால் உங்கப்பாவைப் பார்த்து, "என்ன ஸார் உங்கப் பெண் கல்பனாவிற்கு கல்யாணம்பண்ணவில்லையா?" என்று கேட்டாராம். அதற்கு உங்கப்பா, சுகுமாரன் வீட்டில் வரதக்ஷிணை கேட்டதைக் கூறிவருத்தப்பட்டாராம். அதற்கு பிரின்ஸ்பால் "சுகுமாரன் எனக்கு நெருங்கிய உறவினன்தான், எப்படியாவது சொல்லி இந்த கல்யாணத்தை முடித்து வைக்கிறேன் என்று உங்கப்பாவிற்கு தைரியம் கூறிச் சென்றாராம். அதே போல் அவர் சுகுமாரன் வீட்டாரிடம் வரதக்ஷிணையினால் ஏற்படும் தீமை எல்லாம் சொல்லி இந்த கல்யாணத்திற்கு சம்மதிக்கும்படிக் கூறினாராம்.

மேலும் கல்பனா மிகவும் கெட்டிக்காரி. எங்கள் காலேஜில்தான் படிக்கிறாள். எதை யெடுத்தாலும் அவள்தான் முதல். அடுத்த வாரம் எங்கள் காலேஜில் 'உஷா பரிணயம்' என்ற நாடகம் போடப் போகிறோம். அதில் கல்பனா சித்திரலேகாவாக நடிக்கப் போகிறாள். நீங்கள் வந்து பாருங்கள் அவள் நடிப்பை' என்றெல்லாம் சொன்னாராம். அவர்கள் உடனே சம்மதித்து விட்டார்களாம். இந்த விஷயத்தை உன் தகப்பனார் என் தகப்பனாரிடம் சொன்னார். எங்கப்பா, "சோபனா! உன் ப்ரெண்டுக்குக் கல்யாணமாமே. நீ போய் கங்கராஜுலேட் பண்ணிவிட்டு வா!" என்றார். அதற்காகதான் இப்போ இங்கே வந்தேன் என்று ஒருவாறாகக் கூறி முடித்தாள்.

கல்பனாவின் ஆச்சரியம் கட்டு மீறியது. 'சோபனா! அப்படின்னா என் நன்றியை பிரின்ஸ்பாலுக்குத்தான் தெரிவிக்கணும்.

**சோபனா:**—'ஆமாம்! நீ போயி அங்குசுகுமாரன் படம் வரை. அப்போதுதான் சுகுமாரன் நாடகத்தில் கண்டு மயங்குவான்.'

**கல்பனா:**—சீ!....உனக்கு எப்போதும் கேலிதான்....

ஃ ஃ ஃ

அடுத்த வாரம் நாடகம் நன்றாக நடந்தது. 'உஷா பரிணய'த்தில் உஷாவிற்கு அநிருத்தன் கிடைத்ததுபோல 'கல்பனா பரிணய'த்தில் கல்பனாவிற்கு சுகுமாரன் கிடைத்து விட்டான். சில தினங்களில் கல்பனா-சுகுமாரன் மணம் விமரிசையாக நடந்தேறியது. எங்கும் ஒரே குதூகலம்.



# என்னருமைத் தந்தை

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி

திருத்துழாய் துளிர்க்கும்போதே வாசனையுடன் துளிர்ப்பதுபோல என் தந்தையும் பிறக்கும்போதே ஞானக்கொழுந்தாகப் பிறந்தார் என்பதைப் போன இதழில் கூறினேன். அந்த ஒரு ஆச்சரியத்தை அவருடைய ஒன்றாவது வயதிலிருந்து 56-ம் வருஷம் பிப்ரவரி 5-ம் தேதி வரையில் பார்த்து அனுபவித்த ஸ்ரீமதி T. C. பட்டம்மாள் (என் பாட்டிக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தவர்) அன்று கதறும்போது சிலவற்றைக்கூறிக் கதறினார். அவர் எப்படிச் சொன்னாரோ அதை அப்படியே எழுதுகிறேன்.

ஸ்ரீநிவாஸன் ஒரு வயது குழந்தையாக இருக்கும்போது எனக்குக் கல்யாணமாகி புதுக் குடித்தனம் அவர்கள் வீட்டில் குடி வந்து சேர்ந்தேன். "உன்னுடைய பாக்யம்தான் இந்த நல்ல வீட்டில் குடித்தனம் இருக்கிறாய்" என்று என் தாய் தந்தையர் அடிக்கடி சொல்லுவர். அதற்குக் காரணம் கோதைநாயகியின் அன்புதான் என்பதை நான் சொல்லவே வேண்டாம். அவளும் நானும் அன்று முதல் இன்று வரையில் ஒருதாய் வயிற்றில் பிறந்த சகோதரிகள் போலவே இருக்கிறோம். எங்கள் அன்பு வளர்ந்ததின் காரணமாக எழுதவும்,படிக்கவும் கோதைக்கு நான் கற்றுக் கொடுத்ததை அவள் பிரமாதமாக நினைத்து ஜகன் மோகினி வெள்ளி விழாவன்று ஸ்ரீ ராஜாஜீ ஹாலில் பாராட்டி பேசியது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கலாம்.

அத்தகைய சிறந்த குணவதியின் வயிற்றில் பிறந்த மாணிக்கம் வை. மு ஸ்ரீநிவாஸன். அவன் ஒரு வயது குழந்தையாய் தொட்டிலில் படுத்திருக்கும்போது சாதாரண குழந்தைகளைப் போல அழவோ, சிரிக்கவோ இல்லாமல் என் மாமியாரை நோக்கி "பாட்டி, ஆராரோ நானா, உலு உலு ஆய் நானா, பூச்சிவானி பிலுவனா பாடு. மண்ணு தின்னாதே கண்ணா பாடு", என்று கேட்பான். அந்தக் காட்சி இன்றும் என் கண்ணிலேயே இருக்கிறது. என்னுடைய மாமியார் ஸ்ரீநிவாஸனிடம் ப்ரத்யேக வாத்ஸல்யம் கொண்டு

சதா அவனுடன் பொழுது போக்குவார். ஏனென்றால் அவருடைய மூத்த பிள்ளைகள் இரண்டு பேரை பறி கொடுத்து தாயுள்ளம் தவிக்கும் வேதனைக்கு இந்தக் குழந்தையின் மழலைச் சொல்லும், சொர்ண பிம்பம் போன்ற வடிவமும், குறுகுறுப்பான பார்வையும் அவருக்கு பெரிய ஆறுதலைக் கொடுத்ததென்றே சொல்லலாம். குழந்தைக்கு சின்ன சின்ன ச்லோகங்கள், பாட்டுகள், எல்லாம் என் மாமியார் சொல்லிக் கொடுப்பார். அவன் 10 மாதக் குழந்தையிலிருந்தே பேச ஆரம்பித்து விட்டதால் $1\frac{1}{2}$ வயதில் ச்லோகங்களையும், பாட்டுகளையும் எப்படி ராகத்துடன் என் மாமியார் சொல்லிக் கொடுப்பாரோ, அப்படியே சொல்லு வான். அதைக் கேட்டு நாங்கள் எல்லோரும் ஆச்சரியப் படுவோம். தவிரவும் என் மாமியார் வேண்டுமென்றே கஸ்தூரி திலகம் வக்ஷஸ்தலே கௌஸ்துபம் என்று சொல்லு வார். உடனே அவன் கைகொட்டிச் சிரித்துக் கொண்டு "ஜயய்ய! பாட்டி அசீ...டு கச்சூரி திலகம், லலாடபல்கே சொல்லாதெ வச்சஸ்தலே சொல்லரையே! தப்பு தப்பு, தப்பு" என்று சொல்லும்போது என் மாமியாருடைய சந்தோஷம் கரை புரண்டுவிடும்.

அவனுடைய இரண்டாவது பிறந்த நாள் கொண்டாட்டத்தின்போது, புதிய உடைகள் அணிந்து கொண்டு வந்


ஸ்ரீ பார்த்தஸாரதி சுவாமி
அதிர்ஷ்ட பிரைஸ் சிட்டு.
56-A, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி—(சென்னை-5)

கிர்வாகஸ்தர் & உரிமையாளர்:—
P. M. திருநாவுக்கரசு

மொத்த மாதம் 12—மீ 1-க்கு சந்தா ரூ. 5

மாதாமாதக் குலுக்கில் சீட்டு விழப் பெற்றவர்கள் திரும்பவும் சந்தா கட்டவேண்டியதில்லை.

பிரைஸ் விழப்பெற்றவர்களுக்கு ரூ 55/- மதிப்புள்ள எவர் சில்வர், பாத்திரங்கள் கொடுக்கபபடும். தங்கம, வெள்ளி நகைகள கேட்கும மெமபர்களுக்கும் அவர்கள் தேவைக்கேற்ற நகைகளை கொடுக்க பிரயாசை எடுக்கப் படும.

"R" குரூப் ஆரம்பம் 15-6-'56

விவரத்திற்கு மேற்படி விலாசத்திற்கு எழுதவும்.

# வாழ்க்கையில் ஒரு குறிப்பு

நான் தற்சமயம் டாக்டர் பட்டத்தைப் பெற்று, ஒரு அரசாங்க ஆஸ்பத்திரியில் பணி ஆற்றி வருகின்றேன். ஆனல் அனைவருக்கும் கிடைக்கும் மனைவி என்ற பட்டம் கிடைத்த பிறகுதான் இப்பட்டம் எனக்குக் கிடைத்தது. செல்வத்திலும், அந்தஸ்திலும் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களான என் பெற்ருேர், நாகரீகத்திலும் நடு நிலைமையையே வகித்தனர். அதனலேயே 14 வயதில் நான் S. S. L. C. தேறிய உடனேயே, தன் சக்திக்கு மிஞ்சியே ஒரு வரனைப் பார்த்து எனக்கு நிச்சயம் செய்தார். என்னைவிட எட்டு வயது பெரியவரான என் கணவர் அச் சமயம் பீ. ஏ. படித்துக் கொண்டிருந்தார். எனது தந்தை அவர்களுக்கு திருப்திகரமாகவே சீர் வரிசைகள் செய்து என்னைக் கொண்டுவிட்டார். தற்காலத்தில் பெண்கள் கல்யாண தினத்தன்றே தங்கள் கணவரிடம் வெட்கமின்றி பழகுவதைக் கண்டு பலர் கேலி செய்கின்றனர். பாவம்! அப்பெண்களை சொல்லிப் பலனில்லை! சாதாரணமாக இருபத்தைந்து வயதிற்குமேல் பெண்களுக்கு விவாகம் ஆகும்பொழுது உண்மையில் அவர்கள் வெட்கப்பட்டால் கூட பாவனையாகத்தான் தோன்றும் எனது தந்தையின் எதிரிலேயே நின்று பேச பயப்படும் எனக்கு அத் தினத் தன்று உண்டான நடுக்கத்தை அளவிடவே முடியாது. பல அனுபவங்களினலும், அறிவு, வயது முதிர்ச்சியினலும் எனது மனம் தற்போது கடினமடைந்துள்ளதால் நான் அன்றையச் சம்பவத்தை நினைத்தால் என்னையே நான் வெறுத்துக் கொண்டு வெட்கமடைகின்றேன்.

அன்று இரவு எனது கணவர் சாதாரணமாக என்னைக் கூப்பிட்டுக் கொண்டு என் அருகில் வந்தார். ஆனல் என் விதி அவருக்குமுன்பே என்னைப் பிடித்துக் கொண்டு, அன்றிலிருந்து இன்றுவரை அவர் என்னை அணுகவொட்டாதபடிச் செய்தது. ஆம்! முதல் முதலாக வும், அதுவே இறுதியாகவும் — மயக்கம் என்னை ஆட் கொண்டு நினைவிழக்கச் செய்தது. ஆனல், மீண்டும் கண் விழித்தபோது காக்காய் வலி என்று அதற்கு பெயர் சூட்டிவிட்டதை உணர்ந்தேன். இரண்டாயிரம் ரூபாய் மேலே கொடுத்தால்தான் அந்த வீட்டில் நான் இருக்கமுடி

---

தான். அவனுடைய தாயார் "பாட்டியை சேவித்தாயா?" என்று கேட்டாள். அந்த இரண்டு வயது குழந்தை சடக் கென்று 'என்னம்மா முதல்லே உம்மாச்சியை (பெருமாள்) சேவிச்சுட்டு அப்புறம்ன பாட்டியை சேவிக்கணும்' என் ருன். அவனுடைய பக்தியும், ஞானமும் சின்ன குழந்தை யிலிருந்தே வளர்ந்து வந்த பெருமை அவன் பெரியவனகிய பிறகே எனக்கு நன்ருகத் தெரிந்தது. (தொடரும்)

யுமென்பதையும் உணர்ந்தேன். அப்பொழுது அந்த வியாதி பறந்துவிடும்போலிருக்கிறது.

பணம் கொடுக்க விரும்பாத என் தந்தை, சொத்துக் களை விற்று என்னை டாக்டருக்கு படிக்க வைத்தார். ஆனால் இதே துக்கத்தில் என் அன்னை மறைந்தாள். அன்று வந்த நான் என் கணவரின் ஊரின் பெயரைக் கூட நினைக்காமல்தான் இருந்தேன். பெற்றோர்களுக் காக என்னை விலக்கி விட்டதாகவும், என் கணவருக்கு உண்மையில் என்னிடம் அன்பிருக்கும் என்று என்னைச் சேர்ந்தவர் நினைத்துக் கொண்டிருந்தனர். வெறும் பயத் தினாலும் களைப்பினாலும் வந்த மயக்கத்தை, படித்தவராக இருந்தும் தெரிந்து கொள்ளாமல் காக்காய் வலி என்று பட்டத்தை சூட்டி அமர்க்களப் படுத்தியதும் அவரே. கதை களில் வருவதுப்போல் இரகசியமாக அவர் அன்பு செலுத் தவுமில்லை; தேறுதல் கூறவுமில்லை.

விதி மீண்டும் விளையாடிற்று. எனது நாத்தனாரின் புக்ககம் நான் இருக்கும் ஊரேதான். எனக்கு அபாண்ட மாக சுமத்தப்பட்ட வியாதி, என் நாத்தனாருக்கே வந்து, அதுவும் நானே அவளுக்கு வைத்தியம் செய்யும்படியாக தற்செயலாக நேர்ந்தது. தனது மன்னி நான் என்பதை அறிந்தும், அவள் தனது புக்ககத்தினரின் எதிரில் காட்டிக் கொள்ளவில்லை. நானும் காட்டிக் கொள்ளவில்லை. ஆனால் கடித மூலமாக தனது சகோதரனையும், தாயாரை யும் வரவழைத்துவிட்டாள். தாங்கள் செய்த பாவத்தின் பலன் தங்கள் பெண் படுகின்றாள் என்று ஏங்கிக் கொண் டிருந்த அவர்கள் என் காலில் விழாத குறையாக மீண்டும் என் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினர். மனித சுபாவத்திற்கு தகுந்தாற்போல நானும் நன்றாக அவர்கள் உள்ளம் துடிக்கும்படியாகக் குத்திக் காட்டி னேன். மறுத்தேன் அவர்களுடன் செல்ல. நம் நாட்டுப் பெண்களின் பண்பு அதுவல்ல என்பது எனக்குத்தெரியும். படித்த இறுமாப்பு என்று நாளை ஊர் தூற்றும். ஏன்? என்னுடைய தகப்பனாரே அவ்வாறு கூறி என்னை அவர் களுடன் செல்லும்படி புத்தி கூறினார். இக் காலத்தில் சாதாரணமாக பெண்களுக்கு கல்யாணம் ஆகும் இருபத் தைந்து வயதில் நான் என் கணவனுடன் குடித்தனம் செய்யப் போகின்றேன். தங்கள் சஞ்சிகையை தவறாமல் நான் படிக்கும் வழக்கம் உண்டு. புக்ககம் போவதற்கு முன், எல்லாம் சுபமாகவே முடிந்தாலும், இதை எழுதி தங் களுக்கு அனுப்புகின்றேன். 'வாழ்க்கையில் ஒரு குறிப்பு' என்னும் பகுதியில் இதை பிரசுரிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

—ஒரு டாக்டர்.




"நாம் இவ்வளவு கூப்பிட்டும் லக்ஷியம் செய்யாமல் போய்விட்டான் பார்த்தியா" என்று பேசியவாறு, இஞ்சி தின்ற குரங்குபோல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே பெண்களும் வந்த வழியே திரும்பினார்கள்.

ரஞ்சன் :—முத்து! உடனே கோவிலுக்குப் போயி ஸ்வாமி தரிசனம் செய்து கொண்டு வரவேண்டும். அதற்கான ஏற்பாடுகளைத் தயார் பண்ணிடு.


முத்து :—எசமான்! எல்லாந் தயார் பண்ணிட்டுதான் இங்கே வந்தேன். ரேவதி அம்மாளை கூப்பிட்டேன் வர மாட்டேனிடுச்சு. நீங்க மட்டும் வாங்க போயிட்டு வரலாம்".

உடனே இருவரும் கோவிலுக்குச் சென்றார்கள்.

சுமார் 60, 70, வருடங்களுக்கு முன்னாலே, மின்சார விளக்கு இல்லாத காலத்திலே கோவிலுக்கு இருபுறமும் பொது ஜனங்களுக்கு உபயோகப்படும்படியான முறையில் அலங்காரமாகவும், அழகாகவும், அவச்யமாகவும் ப்ரகாசிக்கும் படியாக இரண்டு தீபஸ்தம்பங்களை ரஞ்சனின் பாட்டனாகிய ரங்கசாமி கைங்கர்யமாக ஏற்படுத்தினார். அதை ஷண்முகம் தொடர்ந்து நடத்திவந்தார். அதனுடைய பொறுப்பு இப்போது ரஞ்சனுடையதாகையால் அவன் வெகு அக்கரையுடன் நடத்தி வருகிறான், கோயிலுக்கு வந்ததும் தீபஸ்தம்பம் கண்ணில் பட்டவுடன் ரஞ்சன் ஒரு விநாடி அப்படியே நின்று விட்டான்.

இதைக்கண்ட முத்து வெகு நுட்பமாகக் குறிப்பு அறிந்து கொண்டு "எசமான்! நீங்க திரும்பி வரவரைக்கும் இந்த விளக்குக் கைங்கர்யம் நடக்குமோ? நடக்காதோன்னு கவலைப்படாதீங்க. இந்தக் கயிதை உசிரோட இருக்கிற வரைக்கும் எந்த வேலையப் பத்தியும் கவலைப்படவேண்டாம். அந்தப் பொறுப்பு என்னிது எசமான்' நீங்க சொன்னாலும் சொல்லாட்டிப் போனாலும் மகாலக்ஷ்மி யாட்டமிருந்த எங்க எசமானி அம்மா சாவரத்துக்கு முன்னே சொன்ன வார்த்தையை கனவிலும் மறக்கவே மாட்டேன் எசமான்!


ரஞ்சன் பரபரப்புடன், "முத்து! அம்மா என்ன சொன்னுங்க. இதுவரை என்னிடம் அதை சொல்லவே இல்லேயே.



முத்து :—எசமான்! சமயம் வரும்போது தானே விசயஞ் சொல்லணும். அம்மா ஆஸ்பத்திரியிலே இருந்த சமயம் ஊட்டுக்குக் காவல் நான் தான் இருந்தேன். அம்மா ளுக்குக் ஒரு கொயந்தெ பொறக்கறத்துக்கு எம்புட்டோ பிரார்த்தனே யெல்லாம் பண்ணிக்கிட்டோம். ஒரு கொயந் தெக்கு பதில் ஒரே சமயத்துலே இரண்டு கொயந்தெ பிறந் திருக்கின்னு கேள்விபட்டு குதிகுதின்னு குதிச்சேன். என்ன இருந்தாலும் நான் வேலக்காரன்தானேங்க. கொயந்தெ பொறக்கறத்துக்குக் கொஞ்சநாளு முன்னே அப்பா ரொம்ப சீக்காக் கிடந்தாரு. அவரு பொயச்சதே புனர்ஜன்மம். ரொம்ம சீக்காக் கெடந்ததாலே அப்பாரு உருமாறி எலும்பும் தோலுமா ஆயிட்டாரு. கொயந்தெ பிறந்த செய்தி கேட்டதும் எனக்கு பாக்கணும் போல ஆசையாயிருந்தது. உடனே ஆஸ்பத்திரிக்கு ஓடியாந் தேன்.

அப்போ அப்பாரு ரூம்புக்கு வெளியிலே நின்னு கிட்டு இருந்தாரு. ஆஸ்பத்திரியிலே இருக்கிற தாதி ஒருத்தி ஒரு கொயந்தயெ கொண்டாந்துகாட்டிகிட்டு இருந்தா. கொயந்தயெ பார்த்தவுடன் சந்தோஷமாயிருக்கறத்துக்கு

பதிலா அப்பாரு மூஞ்சி ரொம்ப வெசனமா போயிடுச்சு. ஏன் இப்படி ஐயா மூஞ்சி வெசனமாயிருக்குதுன்னு கவலைப்



பட்டுண்டே கதவுக்கிட்டே நின்னுகிட்டு எட்டிப் பாத்தேன். அப்பாரு வெசனமாயிருக்கறதெப் பார்த்தவுடனே எனக்கு உள்ளே போறத்துக்கு காலே எழும்பலே. ஐயா மூஞ்சியையே பாத்துக்கிட்டு கதவுகிட்டையே ஆடாமெ அசையாமெ நின்னுட்டேன். எனக்கு அப்போ, ஐயா வெசனப்படற விசயம் தெரியாது.

எசமான் கொயங்தெயப் பாத்துட்டு 'விர்'ன்னு வெளியே வந்தாரு. அவரு வரச்சொல்ல நான் கதவுக்கிட்டே நிக்றதெ பார்த்துட்டு. "முத்து! கொயந்தையெப் பாக்க தானே வந்தே. உள்ளே போய் பாத்துட்டு சீக்கிரமா வீட்டுக்கு வா", ன்னு சொல்லிபுட்டு விடுவிடுன்னு போயிட்டாரு.

நான் மொள்ளமா உள்ளே போனேன். அந்த தாதி, அம்மா படுத்துகிட்டு இருக்கிற ரூம்புக்கு அழைச்சிகினி போச்சி. அம்மா கட்டில்லே படுத்துட்டு இருந்தாங்க. பக்கத்துலே இரண்டு தொட்டில்லே இரண்டு கொயந்தே இருந்தது. நான் போயி', அம்மா!"ன்னு கூப்பிட்டேன். அம்மா கண்ணெ தொறந்து பார்த்துட்டு திரும்பியும் கண்ணெ மூடிகிட்டாங்க. கொஞ்சநேரங் கழிச்சு கண்ணைத்திறந்து என்னைப் பார்த்து "முத்து!"ன்னு கூப்பிட்டுட்டு. அந்த ரெண்டுதொட்

டிலேயும் காட்டி. "நம்ப பெரியவங்க கோவிலுக்கு இரண்டு பக்கத்துலேயும் தீபஸ்தம்பம் ஏற்படுத்தி இருக்காங்களே; அதுபோல இந்த இரண்டு குழந்தெங்களும் இரண்டு தீபஸ்தம்பம். அது அணையாது பாத்துக்க வேண்டியது உன் கடமை'ன்னு சொல்லி புட்டு கண்ணெ மூடிகிட்டாங்க.

எனக்கு ஒண்ணுமே தோணல்லே "ஏம்மா இப்பிடில்லாம் சொல்றீங்க. பேசாம இருங்கம்மான்னு" சொன்னேன். பெறகு அம்மா என்னைப்பார்த்து 'மூத்து! நீ நல்ல பொண்ணுப்பார்த்து கல்யாணம் பண்ணிண்டு வீட்டோடையே இரு. வீட்டை விட்டு போயிடாதே. அன நானு வீட்டை விட்டு போயிடுவேன்"னு சொன்னுங்க. எனக்கு அழுகையழுகையாய் வந்தது. இதுக் குள்ளாரெ ஐயா சீக்கிரமா வரச்சொன்னது நெனப்பு வந்தது. அம்மாவை விட்டுட்டு போகவும் மனசு வரல்லே. ஐயா கோவிச்சிக்க போருரேன்னும் தோண்ணித்து.

யாரோ ஒரு தாதியைப் பார்த்து,"ஏன் அம்மா இப்பிடி பேசுறுங்க ஒன்னும் பயமில்லேயே. கொயங்தெங்களுக்கு ஏதாவது ஆபத்தா. அதுனலே இப்பிடி இருக்காங்களா" ன்னு கேட்டேன்.

அதுக்கு அந்த தாதி, "கொயங்தெக்கு ஒரு கேடுமில்லே. அம்மாதான் சந்தேகம்" அப்பிடின்னு.

எனக்கு இடி இடிச்சாப்பலே இருந்துது. உடனே நேரே வீட்டுக்கு ஓடினேன். அதுக் குள்ளார அப்பாவே திரும்பியும் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிண்டு இருந்தாரு. அவரு என்கிட்டே ஒரு தந்தி எழுதி கொடுத்து போஸ்டாப்பீஸ்லே அடிச்சுட்டு வரச் சொன்னரு. நான் போஸ்டாபீஸ்லே இருக்கற ஐயாவெ என்ன எழுதியிருக்குன்னு கேட்டேன்.

அதுக்கு அவர் "அம்மாளுக்கு ரொம்ப டேன்ஜர் உடனே வரவேண்டியதுன்னு அவங்க அம்மாளுக்கு எழுதியிருந்தது"ன்னு சொன்னர்.

எனக்கு அப்படியே தீயிலே குதிச்சது போல இருந்தது. அதுக்கு மேலே என்னத்துக்கு எசமான்? அன்னிலேயிருந்து நான் உங்க ரெண்டு பேரையும் என் கண்ணு பாத்துக்கறேன். அம்மா "தீபஸ்தம்பம் அணையாத பாத்துக்கோன்னு" சொன்னது எப்போதும் என் நெஞ்சிலேயே இருக்குது எசமான்." என்று கூறினன்.

முத்துவின் கண்ணிலும், ரஞ்சனின் கண்ணிலும் கண்ணீர் தாரை தாரையாக பெருகி ஓடியது. இதைக்

கேட்ட ரஞ்சனுக்கு உணர்ச்சி மேலீட்டால் பழைய பல தோற்றங்கள் கண் முன்பு மின்னல் கொடிபோன்று தோன்றின. கோவில் என்பதையும், கூட்டம் கூட்டமாக ஜனங்கள் இருப்பதையும் மறந்து முத்துவின் கைகளை பற்றி கண்களில் ஒற்றிக் கொண்டான். பிறகு ஸ்வாமி தரிசனத்தை முடித்துக்கொண்டு நேரே ஸதாசிவம் பெரியவர் வீட்டுக்கு வந்தார்கள்.

அவர் நேம நிஷ்டையோடு கூடியவர். அவர் அப்பொழுது ஸ்வாமிக்குப் பூஜை செய்து கொண்டிருந்தார்.

ரஞ்சன் பூஜையைக் கலைக்க மனமின்றி நமஸ்காரம் மட்டும் செய்து விட்டு ஹாலில் நாற்காலியில் அமர்ந்தான். அப்போது சதாசிவ தாத்தாவின் பேத்தி ஓடிவந்து "மாமா! நீங்க அமெரிக்காவுக்குப் போறங்களாமே. அந்த ஊர் கூட நம்ப ஊர் போலவே இருக்குமா? அந்த ஊரிலே எந்த பாஷை பேசுவா? நீங்க போனு அங்கே எங்கே இருப்பங்கோ....அங்கே இருக்கவாளெல்லாம் உங்களுக்குத் தெரியுமா ?....சாதமெல்லாம் யார் போடுவா?....அந்த ஊரிலே யார் காபி கொடுப்பா? காபி சாப்பிடுவாளோ அந்த ஊரிலே......."என்று தன் குழந்தைத் தனத்தை விண்டு காட்டிக் கேட்டாள்.

இதைக் கேட்ட ரஞ்சன் அபரிமிதமான சந்தோஷமடைந்து, "சரஸா! எனக்குமட்டும் என்ன தெரியும்மா.... நானும் இப்போதானே போப்போறேன்....ஆனு...அங்கே இருக்கவா எல்லாம் இங்லீஷ் தான் பேசுவா....நான் அந்த ஊருக்குப் போயி எப்படி எப்படி இருக்குன்னு பெரிய கடுதாசி எழுதறேன். அதெப்படிச்சு தெரிஞ்சுக்கோ . . .

**ஸரஸா** :—மாமா ! இங்கே உங்களுக்கு உறவுகாரா.... சிநேகிதா எல்லாரும்இருக்கா....அங்கேபோனு....ஒத்தருமே இருக்கமாட்டாளே....உங்களுக்கு எப்படி போது போகும்.

**ரஞ்சன்** :—ஏம்மா ! போதுபோகாது?....நான் படிக்கறத்துக்கு தானே அந்த ஊருக்குப் போறேன்....பெரிய படிப்பானதாலே நான் படிச்சுண்டே இருப்பேன். போது போயிடும்.

**ஸரஸா** :—அப்பப்ப!....எப்பப் பார்த்தாலுமா படிச்சுண்டே இருப்பங்கோ?...எனக்கு பரீக்ஷை சமயத்துலே படிக்கறத்துக்கே ரொம்ப கஷ்டமா இருக்கு....இந்தத் தாத்தாஎப்பப்பார்த்தாலும் படி படின்னுதொணப்புவா.... நான் தாத்தா எப்போ வெளிலே போவான்னு காத்துண்டிருந்து விளையாட ஓடிடுவேன்... நீங்க என்னன்ன....எப்

போப்பார்த்தாலும் படிப்பேன்னு சொல்றங்களே...அப்டி படிச்சா மூளை தான் கொழம்பிடும்....

ரஞ்சன் :—(சிரித்துக்கொண்டே) நீ சின்ன கொழந்தெ... அதுனலே உனக்கு விளையாட்டு புத்தி ஜாஸ்தி....படிக்கத் தோணுது, நான் பெரியவன் ஆனதாலே படிப்பேன்...எப்பப்பார்த்தாலுமா படிப்பேன். கொஞ்சநேரம் படிப்பேன், தோட்டத்திலே நின்று வேடிக்கைப் பார்ப்பேன், அங்கே இருக்கவாளெல்லாம் சிநேகிதம் பண்ணிண்டு பேசுவேன்.... ஹூம்... ஸரஸா? நீ ஒரு கேள்வி கேட்டயே அதுக்கு பதில் சொல்ல மறந்துட்டேனே! அமெரிக்காவிலே காப்பி கிடைக்குமான்னயே? அமெரிக்காவிலேமட்டுமில்லே..கைலாசம்...வைகுண்டம் போனகூட காப்பிக்கிடைக்கும். அது இல்லாத இடமே இல்லே...



ஸரஸா :—நீங்க சொல்றதைப் பார்த்தா எனக்கும் உங்கக்கூட வரணும் போல இருக்கு மாமா...நீங்க ஊருக்குப் போயிட்டு திரும்பி வரத்துக்கு எத்தனை நாளாகும்?

ரஞ்சன் :—எத்தனை நாளா? நாளெல்லாம் இல்லே. நாலு வருஷமாகும்!...

ஸரஸா :—அப்பாடி!...நாலு வருஷமாகுமா? அதுனலே தான் தாத்தாவும், பாட்டியும் எப்போ பார்த்தாலும் ரஞ்சன் ஊருக்குப்போயி நல்லபடியாய் திரும்பி வரணும்... அப்படின்னு பெருமாளை வேண்டிக்கரா...அதுவுமில்லாமெ உங்களை எப்போப் பார்த்தாலும், குணவான், சத்திய சந்தன், கெட்டிக்காரன் அப்பிடின்னெல்லாம் புகழரா. நேத்திக்கு அப்பிடிதான் தாத்தாவும் பாட்டியும் நீங்க நல்ல படியாய் திரும்பி வரணும்னு சொல்லிண்டு இருக்கச்சே... நான் 'எல்லாம் நல்லபடியா போய் வருவான்'னு பாட்டி போலச் சொன்னேன். எல்லாரும் சிரிச்சுட்டா...என்று கூறி 'களுக்' கென்று சிரித்தாள்.

குழந்தைகளுக்கு எப்படி மூளை விருத்தியாகிறது என்று எண்ணி பூரித்து சரஸாவை சேர்த்து அணைத்துக் கொண்டு "சரஸா! பெரிய பாட்டி மாதிரி பேசறயே. இதேமாதிரி நீ தினமும் எங்காத்துக்குப்போயிபாப்பாவோ டெல்லாம் பேசு, விளையாடு...அப்புறம் ரேவதி அக்காவோ டெல்லாம் பேசு என்ன...அப்போ...நான் அமெரிக் காவுக்குப் போயிட்டு நல்லபடியா திரும்பி வரச்சே...நம் நாட்டுலே இல்லாத பொருள்கள் அமெரிக்காவிலே இருக் கறதெ வாங்கிண்டுவரேன்..."என்று சொல்லிக்கொண்டி ருக்கும்போது சதாசிவம் தன் பூஜையை முடித்துக் கொண்டு. ஹால்பக்கம் வந்தார்.

சதாசிவம் :—சரஸா! என்ன அறட்டை அடிக்கறே... உனக்கு அமெரிக்காவிலேருந்து என்ன என்ன வாங் கிண்டு வரணும்னு சொல்றயா?...உன் அண்ணுகூட அமெரிக்காவிற்கு போவானுன்னு நினைக்கறயா? என்று கேட்டார்.


ரஞ்சன் :—(வணக்கமாக நமஸ்காரம் செய்து) 'தாத்தா! அவள் ஒண்ணும் அறட்டை அடிக்கல்லே...ஏதோ குழந்தைத் தனமாபேசறு...பலே 'கெட்டிக்காரியா இருக்காளே...தாத் தா!நான்போய்விட்டுவருகிறேன்,தாங்கள் தான் எங்கள்குடும் பத்தின் பொறுப்பு பூராவையும் கவனித்துக்கொள்ள வேண்டும். ரேவதியின் விளையாட்டுப் புத்தியைமாத்தி நல்ல பண்பாட்டை போதிக்க வேணும்.ரகுவுக்கும் நீங்கள் புத்தி சொல்லி சித்தி மனது மகிழும்படிச் செய்யவேண்டும். எனக்குப் பேசவே தெரியல்லே தாத்தா ! நான் ஏதா வது தப்பா சொல்லியிருந்தால் மன்னித்து விடுங்கள்.

பிரதிபலனைக் கருதாது மேகத்தைப்போல உதவி செய்யும் உங்களுக்கு ஒன்றுமே சொல்ல வேண்டியதில்லை.' என்ருன்.

சதாசிவம் ரஞ்சனின் தலையைத் தடவி ஆசீர்வதித்து "குழந்தாய்! இந்த சந்தோஷத்தைப்பார்க்க உங்க அப்பா இல்லையேன்னு நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். அவர் தெய்வமாக இருந்து உன்னை ஆசிர்வதித்து காப்பாற்ற வேண்டும். குடும்பத்தைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப் படாதே. முத்துவும் நானும் இருக்கிருேம். உன்னுடைய உடம்பை ஜாக்கிரதையாகப்பார்த்துக்கொள்ளு. உனக்கு நான் ஒன்றுமே சொல்ல வேண்டாம். நீ மகாபுத்திசாலி. அடிக்கடி கடிதமெழுது. மங்களகரமாய் போய்வா" என்று கூறி ஸ்வாமிக்கு நைவேத்யம் செய்தப் பாலை அவனுக்குக் கொடுத்து நெற்றியில் திலகமிட்டு அனுப்பினர்.

ரஞ்சன் சதாசிவத்திடமும், சரஸாவிடமும் விடை பெற்று,வாசலில் நின்றிருந்த முத்துவை அழைத்துக் கொண்டு வீடு திரும்பினன். மறுநாள் விமானம் ஏற வேண்டும்.

விருந்துக்கு அழைக்க வருகிறவர்களும், கல்யாணத் திற்கு இப்போதே பெண்ணை நிச்சயம் செய்துவிட



வேட்டையாட வருபவர்களும், கூட்டம்கூட்டமாகப் பெருகி விட்ட தலைவேதனையை ரஞ்சனால் பொறுக்கவே முடிய வில்லை. 'தயவு செய்து எல்லோரும் மன்னியுங்கள். என் தகப்பனார் இறந்து இன்னும் சில மாதங்கள்கூட ஆக வில்லை. இதற்குள் என்னை விருந்துக்கு அழைப்பதே சரி யில்லை. நல்லபடி நான் போய் திரும்பி வந்த பிறகு பார்த் துக் கொள்ளலாம்' என்று ரஞ்சன் கண்டிப்பாகச்சொல்லி விட்டான்.

அதற்குமேல் ரஞ்சனின் பிரயாணத்திற்கு வேண்டிய காரியங்கள் துரிதமாக நடந்தன. ரஞ்சன் அமெரிக்கா விற்குப் போகும் செய்தியை எல்லா பத்திரிகைகளிலும் முக்கியத்துவம் கொடுத்து எழுதினார்கள். எல்லோர் கையி லும் பத்திரிகை; இதைப்பற்றியே எங்கும் பேச்சு.

ரஞ்சன் தன் சிறிய தாயாரிடம் சென்று 'சித்தி! நான் போய் வருகிறேன். அடிக்கடி கடிதம் எழுதிக்கொண்டிரு. ரேவதியை ஜாக்ரதையாகப் பார்த்துக் கொள். ரகுவை நன்றாகப் படிக்கச் சொல்லு. அப்பாவின் சிநேகிதராகிய சதாசிவம் அடிக்கடி வந்து சகல விஷயத்தையும் கவ னித்துக் கொள்வார். முத்துவையும் வள்ளியையும் பிரத் யேகமாய் பார்த்து கொள்ளும்படி நான் கேட்டுக்கொள் கிறேன்' என்று பணிவாகச் சொல்லும் வார்த்தைகள் ஒன்றையும் லக்ஷ்யம்செய்யாத லக்ஷ்மி அம்மாளுக்கு,மறுபடி யும் ரஞ்சனுக்கு இத்தகைய அதிர்ஷ்டம் வந்து விட்டதை எண்ணி இதயம் வெடித்துவிடும்போல் பொறாமை பொங்கு வதால் ரஞ்சனுக்கு நல்ல வார்த்தைகள் சொல்லி அனுப்பு வதற்குப் பதிலாக ப்ரமாதமாய் விசும்பி விசும்பி அழுதுக் கொண்டே "மகராஜனா போய் வாப்பா. புண்ணியத்தைச் செய்து உன் அம்மா உன்னைப் பெற்றாள். என்னைப் போல பாவக் கட்டையா? இந்த வீட்டில் முத்துவுக்கு இருக்கிற செல்வாக்கில் எனக்குக் கடுகளவாவது உண்டா? இனிமேல் அவன்தானே எங்களை அதிகாரம் செய்து பார்த்துக் கொள்ளவேண்டும்" என்று முடிப்பதற்குள்,

"சித்தி! முத்துவினுடைய உத்தம குணத்தை நீங்கள் இன்னும் அறியாமலேயே பேசுகிறீர்கள். என்னை மன்னிக்கவேண்டும். எனக்காக அவனையும் அவன் குடும் பத்தையும் கவனித்துக் கொள்ளுங்கள். நான் சுகமாகச் சென்று ஜயப்ரதமாகத் திரும்பி வரவேண்டும் என்று ஆசீர்வதியுங்கள்" என்றான்.

அதே சமயம் இவனை வழி யனுப்புவதற்கு பலபேர் வந்துவிட்டதால் மேலே பேச முடியவில்லை. ரேவதிக்கும் புத்தி சொல்லிவிட்டு, முத்துவை அழைத்து, "முத்து! நான்

போய் வருகிறேன். அம்மாவின் மனம் நோகும்படி நீ ஒன்றும் சொல்லாதே. யார் எதைச் சொன்னாலும் எனக்காகப் பொறுத்துக் கொள். நான் உனக்கு அடிக்கடி கடிதம் எழுதுகிறேன். நீயும் அடிக்கடி ரேவதியின் மூலம் கடிதம் அனுப்பு" என்று சொல்லிவிட்டு முத்துவின் கையில் ஒரு சிறிய பணப் பையைக் கொடுத்தான். முத்துவுக்கு இரு கண்களும் இரு அருவி போலாய் விட்டன. வாய் பேச முடியவில்லை. தான் வேலைக்காரன் என்பதையும் மறந்து ரஞ்சனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டு, "எஜமான்! சொகமா போயி சேமமா வந்து சேரணம். பெரிய எசமான் தான் தெய்வமா இருந்து காப்பாத்தணம்" என்றான்.

அடுத்தவினாடி கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக விமான நிலையத்தை அடைந்தன. ரஞ்சன் ஒவ்வொருவரிடமும் நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டு, ரேவதியை நோக்கி, "தங்கச்சி! நீ பாரத நாட்டு நாரீமணி என்பதை மறக்காமல் அந்தப் பண்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும். அடிக்கடி நம்ம சதாசிவ தாத்தா வீட்டுக்குப்போய் அவரிடம் மரியாதையாகப் பேசி புத்திமதிகளைக் கற்றுக்கொண்டு வா. உன்னுடைய துணிச்சலான போக்கை இதோடு நிறுத்தி விடு. நான் வருகிறேன்" என்று கூறினான்.

'முத்து! நான் சொன்னதெல்லாம் ஞாபகத்தில் இருக்கிறதா? நான் போய் வருகிறேன்' என்று சொல்லும் போது விமானம் புறப்படவேண்டிய மணி அடித்துவிட்டது.

ரஞ்சன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு விமானத்தில் ஏறினான். அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் விமானம் பறந்துவிட்டது. வழி அனுப்ப வந்தவர்கள் எல்லோரும் தம்தம் மனதிற்குள்.... ரஞ்சன் திரும்பி வந்தவுடனே எனக்குதான் மருமகப்பிள்ளை..... எனக்குதான் மருமகப்பிள்ளை.... என்று எண்ணினார்கள்.

விமானம் செல்லும் திக்கையே பார்த்துக் கொண்டு, ஸ்தம்பித்து நிற்கும் முத்து, 'என் எசமான் சொகமா திரும்பி வரணும் ஆண்டவனே!' என்று பிரார்த்தனை செய்தபடி கண்ணீர் பெருக நின்றுவிட்டான்.

---

## அத்தியாயம் 3.

### ப்ரயாணச் சிறப்பு, பொறாமை நெருப்பு

ரஞ்சன் விமான நிலையத்திற்கு சென்றவுடனே லக்ஷ்மி அம்மாள் ஒரு முறை பங்களா பூராவும் சுற்றிப்பார்த்தாள். ஏராளமான ஜனங்கள் ரஞ்சனை வழியனுப்புவதும், மலர்மாலைகள் சூட்டுவதும்,

கைக்குலுக்குவதும், பரிசுகள் வழங்குவதும் போன்ற இக் காட்சிகளைக்கண்ட பிறகு லக்ஷ்மி அம்மாளின் மனதில் ஒரு புரட்சி உண்டாகியது. எத்தனைப்பெருடைய கட்டுப் பாடான பாராட்டு... ஆசிமொழிகள்? எவ்வளவு பேருடைய அன்பு? அடேயப்பா! ஹூம்...என்று பெருமூச்சு விட்டாள். கணவனை இழந்து தன் வாழ்வு பாழாகிவிட்டதை கூட அவள் பொருள் படுத்தவில்லை. ரஞ்சனுக்கு இத் தகைய பெரும் பாக்கியம், கிடைத்துவிட்டதை எண்ணி அவள் இதயத்தில் பொறுமைத் தீ கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது.

'இந்தக் காலத்தில் அமெரிக்காவிற்கு போவதும் சீமைக்குப் போவதும் புழக்கடை, தலைக்கடை யாகி விட்டது. போகிறவர்களில் படிக்குப் பாதிபேர் கெட்டலைந்துதான் வருகிறார்கள். அதுமாதிரி ரஞ்சனும் ஒரு வெள்ளைக்காரியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு திரும்பி வராமல் அங்கேயே இருந்துவிட்டால்?........

ஹூம்....அவன் ஏன் அப்படி இருக்கிறான். எனக்குப் பிறந்திருக்கிறதே மாணிக்கம் அதுதான் நான் உள்ளூரில் இருக்கும்போதே என்னை எதிர்த்து சண்டையிட்டு விரோதித்துக் கொண்டு கெட்டலைந்து திரிகிறது. விமான நிலையத்திற்குப் போக வேண்டாம் என்று சொல்லிய என் வார்த்தையைக் கேட்டானு? அங்கே போய் பத்துபேர்கள் எதிரில் பல்லை இளித்துக் கொண்டு நிற்கும்....ஹூம்....நான் பண்ண பாக்யம்' என்று எண்ணியவாறு தன் கடைசி பையன்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு எண்ணை தேய்க்க ஆரம்பித்தாள்.


பூர்ண கர்ப்பிணியாகையால் வள்ளி விமான நிலையத்திற்குப் போகவில்லை. வாசலிலே நின்று கார்கள் மறையும்வரைப் பார்த்தாள். ரஞ்சனின் கார் புறப்பட்டுச் செல்லும்போது, கூடை நிறைய சாணியை எடுத்துக் கொண்டு ஒரு சுமங்கலி வருவதைக் கண்டாள். வள்ளிக்கு தூக்கி வாரி போட்டது. ஐயோ!...ஐயா கிளம்பச் செல்ல சாணி வருதே. அது நல்ல சகுனமோ இல்லையோன்னு அவள் மனத்தை வேதனை வாட்டி எடுத்தது. அப்போது அந்த வீட்டிலேயே ப்ரைவேட் சொல்லிக் கொடுக்கும் பெரியவர் ரஞ்சனை வழியனுப்ப ஓட்ட ஓட்டமாக ஓடி வந்தார்.

"வள்ளீ! ஐயாவெல்லாம் விமான நிலையத்திற்கு போயிட்டாங்களா?" என்று கேட்டார்.

அதற்கு வள்ளி, "யாரு? வாத்தியார் ஐயாவா? வாங்க ....வாங்க...அதோ தெருக்கோடியிலே தூசி பறக்கறது

பாருங்க. காரு இப்போதான் போச்சுங்க...வாத்தியா ரய்யா....எனக்கு ஒரு சந்தேகங்க..........

**வாத்தியார்** :—சந்தேகமா?.......வொனக்கென்ன சந் தேகம்? சொல்லு வள்ளி. உன் சந்தேகத்தைத் தீர்க்கிறேன்.



**வள்ளி** :—சின்னையா கார் பொறப்படச் செல்ல ஒரு கட்டுகவுத்தி கூடை நிறைய சாணி எடுத்துக்கிட்டு வந்தா... அது நல்ல சகுனமா?...கெட்ட சகுனமான்னு தெரியல்லே ........ன்னு கூறி முடிப்பதற்குள்.

**வாத்தியார்**:—(பரபரப்புடன்) நிஜமாகவா வள்ளி சொல்றே?....அது ரொம்ப நல்ல சகுனமாச்சே! அதெப் போலே நல்லது வேறே இல்லே. அப்பாடி....என்றார்.

**வள்ளி** :—ஐயா! நீங்க நெசமாவா சொல்றீங்க...இல் லேன்னு வெளயாட்டுக்குச் சொல்றீங்களா?....என் மனசெ அப்போப் பிடிச்சு வேதனை புடுங்குது....

**வாத்தியார்** :—விளையாட்டுக்குக்கூட சொல்லுவேனு? வள்ளி ரஞ்சனிடம் உனக்குள்ள அக்கறை எனக்குமட்டும் இல்லையா? என்கிட்டே படிச்சப்பையன் கெட்டிக்காரனு இவ்வளவு நல்ல நிலைமைக்கு வந்து, விமானத்துலே பறக் கருன்னு அந்தப் பெருமை எனக்கல்லா! அது ரொம்ப நல்ல சகுனம். வள்ளி! இதோ பாரு...இன்னொண்ணு கூட சொல்றேன். எனக்கு கல்யாணத்துக்கு பெண் பார்க்கறத்துக்கு கிளம்பும் போது ஒரு சுமங்கலி சாணியை எடுத்துக்கொண்டு வந்தாள். அந்த சகுனம் ஒண்ணே

போதும்ன்னு ஜாதகம், ஜோஸ்யம், ஒண்ணுமே பாக்காதே கல்யாணம் பண்ணிட்டா. இப்போ எங்களுக் கென்ன. நன்னுதானே இருக்கோம்,

**வள்ளி** :—சாணிக்கு அத்தனெ பெருமைங்களா? இருக்குது........

**வாத்தியார்** :—அடெடெ! இன்னும் எவ்வளவோ இருக்கு வள்ளி! பாவம். உனக்குப் படிக்கத் தெரியாது. இதுக்குன்னே மஹாபாரதத்திலே ஒரு கதைகூட இருக்கு. சமயம் வரும்போது உனக்கு சொல்றேன்......

**வள்ளி** :—இருக்கட்டுஞ் சாமி! என்னவோ தாயுந் தகப்பனும் இல்லாத கொயந்தெ. அதுக்கு ஒரு கொறவும் வராத இருந்தா, அதுவே நம்பளுக்கு போதுங்க......

**வாத்தியார்**:—அதைதான் எல்லாரும் வேண்டிக்கறது சரி வள்ளி. எனக்கு நேரமாச்சு. ·ரேவதி அம்மாளை ஜாக்ரதையாப் பாத்துக்கோ. நான் போயிட்டு வரேன்... என்று சொல்லிவிட்டு வாத்தியார் போய்விட்டார்.

வள்ளி உள்ளே வந்தாள். உள்ளே வரும்போது லக்ஷ்மி அம்மாள் குழந்தைகளுக்கு எண்ணெ தேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. லக்ஷ்மி அம்மாள் எஜமானி, தான் அவள் கீழ் வேலைக்காரி என்பதையும் மறந்து. "என்னம்மா! சின்னையா இப்போதான் வீட்டைவிட்டுபோயிருக்காரு. உடனே எண்ணெ தேய்ச்சு தலை முழுவினா ஐயாவுக்கு ஆவாதுன்னு தானே நாளைக்கு தேச்சுகிடலாம்னு கம்னு இருந்தேன். நான் தேக்கமாட்டேனும்மா?" ஐயா சொகமா போயி நல்லபடியா திரும்பி வரவேணுங்களா?...என்று படபடப்புடன் கேட்டுவிட்டாள்.

லக்ஷ்மி அம்மாளுக்கு ஏற்கனவே பொங்கும் பொருமை தீயை வள்ளி கேட்ட கேள்வி இன்னும் நன்றாக எரிய விட்டது போல் ஆகியது.

**லக்ஷ்மி** :—(ஆத்திரத்துடன்) ஹாஹாம்....உங்க சின்னையா விமானத்துலே பறக்கறதுக்கு முன்னேயே இங்கே உன்னுடைய அதிகாரம் கொடிகட்டிப் பறக்க ஆரம்பிச் சுட்டதா?....ஏ! வள்ளி! இப்பவே சொல்லிவிட்டேன் நீயா கட்டும் உன் புருஷனாகட்டும் என் விஷயத்திலே தலையிட்டு அதிகாரம் பண்ண. அப்புறம் என்ன நடக்கும்னு தெரியாது. நீ என்ன எனக்கு புத்தி சொல்ல மாமியாரா? உங்க சின்னையாவுக்கு ஒரு கொறவும் இல்லே. நல்லா போயி சொகம்மா திரும்பி வருவாரு. திரும்பி வந்து நீங்க ரெண்டு பேரும் இன்னும் அதிகாரம் பண்ண செல்லம் கொடுப்பாரு. அவருக்கு ஒரு கொறவும் வராத இருக்க

ப்ரார்த்தனை பண்ண நீயும் முத்துவும் இருக்கச்சே அவனுக்கு என்ன கொறவு. நான் என் கொழந்தகளுக்கு என்னவேணு பண்ணிப்பேன். அது என் இஷ்டம். என் விஷயத்துலே தலையிடாதே, ஜாக்கிரதை"........என்று லேசாக ஒரு வெடிகுண்டை வீசி எறிவதைப் போல சொன்னாள்.

ஃ ஃ ஃ

விமானம் மறைந்து விட்டது. விமான நிலையத்திலுள்ளோர் அவரவர்கள் தம் மனப்போக்கின்படி ரஞ்சனை புகழ்ந்து பேசியவாறு வெளியே சென்று கொண்டிருந்தனர். ஆனால் முத்து மட்டும் கண்களிலிருந்து கண்ணீர் பெருக தானிருந்த இடத்தை விட்டு நகராது நின்றிருந்தான்.

ரேவதி ஓடிவந்து ஏளனமாக, "என்ன முத்து! அப்படியே நின்னுட்டே. நமக்கும் ஒரு ரக்கை இருந்தா பறந்து போலாமேன்னு நினைக்கறயோ, நேரமாச்சு வீட்டுக்குப் போலாம் வா." என்று சிரித்தவாறு கூறினாள்.


நிஷ்டையிலிருந்து கலைக்கப்பட்ட யோகியைப் போல தன் உணர்வு பெற்று, "இதோ வந்துட்டேம்மா" என்று முத்து பின்னாலேயே வந்தான்.

ஷண்முகம் காரில் போகும் போது எப்போதும் முத்துவை அழைத்துக் கொண்டு போவார். ரஞ்சனோ முத்துவை தன் பக்கத்திலேயே உட்கார வைத்துக் கொள்வான். ஆனால் லக்ஷ்மி அம்மாளோ, ரேவதி, ரகுவோ போகும்போது முத்துவை ஏறெடுத்துக்கூட பார்க்க மாட்டார்கள்.

முத்து கண்களை துடைத்தவாறு ரேவதியை பின் தொடர்ந்து நிலையத்தின் வாயிலுக்கு வந்தான். காரிடம் சென்ற ரேவதி சற்று தள்ளி தன்னுடைய சிநேகிதி சபலா நிற்பதைப் பார்த்து, " சபலா! சபலா! இங்கே வா....எங்கள் காரிலேயே உன்னை கொண்டு விட்டு விடுகிறேன்....என்று கூவினாள்.

ரேவதியின் அருகில் சபலா வந்து, " ரேவதி! நான் தெரிந்தவர்கள் காரில் வந்தேன். அவர்கள் காரிலேயே போகிறேன். இன்னொரு நாள் உன்னை சந்திக்கிறேன்" என்றாள்.

**ரேவதி** :—பரவாயில்லை சபலா. அவர்களிடம் நீ சொல்லிவிட்டு வந்து விடு. என் காரிலேயே வா. நாம் இருவரும் ஜாலியாக பேசிக் கொண்டே போகலாம்.......



சபலாவும் அதற்கிணங்கி காரில் ஏறிக் கொண்டாள். முத்து காரின் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தான். முகத்தைத் திருப்பிய ரேவதி முத்து நிற்பதைக் கண்டு "முத்து! நீ எப்படியாவது பஸ்ஸில் வந்து சேரு. நாங்கள் போகிறோம்" என்றாள்.

**சபலா** :—ஏன் ரேவதி? முன்பக்கம் ஸீட் காலியாகத் தானே இருக்கிறது. அதில் அவன் உட்காரட்டுமே.

**ரேவதி** :—சே! வேலைக்காரர்கள் நமக்குச் சமமாக காரில் வருவதா?....எனக்கு அது கொஞ்சம்கூட பிடிக்காது. எங்கப்பாவும், ரஞ்சனும் முத்துவை உட்கார வைத்துக் கொள்ளும்போது கூட நான் அவர்களைத் திட்டுவேன்....என்று கூறிவிட்டு ட்ரைவர் ஹாம்....கிளம்பு என்று கர்வத்துடன் கூறினாள். சில விநாடிகளில் கார் மான் வேகமாகப் பறந்து மறைந்தது. முத்து அப்படியே நின்றுவிட்டான். ஆனால்....

எப்போதும் இப்படி நடப்பதால் அது முத்துவுக்கு புதிதுமில்லை அதிர்ச்சியுமில்லை. அதனால் அவன் அதை லக்ஷியம் செய்யவில்லை. அவனுக்கு கோவிலுக்கு போக வேண்டும் என்று ஒரு எண்ணம் பளிச்சிட்டது. உடனே ஒரு பஸ்ஸில் ஏறி கோவிலுக்குச் சென்றான். அவன் பஸ்ஸிலிருந்து இறங்கும் போதே கோவிலில் மணியோசை கேட்டது. முத்துவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை.

"நாம் நம்ப ஐயா நல்லபடியா திரும்பி வரணும்னு நினைக்கச்சே மணியடிக்குதே. எவ்வளவு நல்ல சகுனம்" என்று எண்ணியவாறே வேகமாகக் கோவிலுக்குள் சென்றான்.

ரஞ்சன் ஊருக்குப் போகுமுன் கொடுத்த பணத்திலிருந்தே ஸ்வாமிக்கு தேங்காய், பழம், வெத்தலை பாக்கு கல்பூரம், முதலியவைகள் வாங்கிக் கொண்டு சென்றான். அப்போது ஸ்வாமிக்கு கற்பூர ஹாரத்தி நடந்து கொண்டிருந்தது. முத்துவும் ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்து வணங்கி, தன் பக்கத்தில் ஜனங்கள் சேவிப்பதையும் மறந்து "ஆண்டவனே! ஏழுமலையானே! எங்க எசமான் நல்லபடியாய் போயி திரும்பி வரணும், ஒரு கெட்ட பழக்கமும், புத்தியும் கொடுக்காதே. போன காரியம் ஜெயிச்சு சந்தோஷமா வரணும்" என்று பலவாறு மனம்போனபடி வேண்டினான்

183203



கலை பேசுகிறது — 'ஸாரக்ராஹி'

# ப்ரத்யக்ஷ ப்ரமாணம்

[கலை பேசுகிறது என்ற பத்தியில் எனக்கு எழுத வாய்ப்பளித்த மோகினி பத்திராதிபர் அவர்களுக்கு என் மகிழ்ச்சியையும் வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.]

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு வாலாடி சுப்ரமணிய ஐயர் அவர்களால் மிகச் சிறப்பாக நடந்தப்பெற்று வந்த **திருவல்லிக்கேணி சங்கீத சபா** அந்த காலத்தில் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும், இப்போதும் பலருக்கு ஞாபகமிருக்கலாம்.

அந்த சங்கீத சபாவில் சிறந்த வித்வான்கள், வித்வாம்ஸினிகளுடைய கச்சேரியோ அல்லது பாகவத சிகாமணிகளுடைய கதைகளோ மாதம் இரண்டுமுறை நடக்கும். அந்த காலத்தில் நாட்டியம் கிடையாது. காயனபடு, கீர்த்தனபடு ஸி. சரஸ்வதீபாய், ப்ரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் இவர்களுடைய கதைகள்தான் அப்போது அதிகம் நடக்கும்.

ப்ரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரியின் கதையில் நடந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.

ஒரு சமயம் இந்த சபையில் 'லக்ஷ்மண சக்தி' என்ற ஹரி கதை காலக்ஷேபம் நடந்தது. அப்போது அவர் சீதை அசோகவனத்தில் இநப்பதை வர்ணித்துக் கொண்டிருந்தார். ''ஆயிரம் குடுமி சேர்ந்தால் ஒரு கலகமுமில்லை; ஆனால் இரண்டு கொண்டை சேர்ந்தால் சண்டை, மண்டை உடைந்துவிடும்' என்று பழமொழி. இங்கேயோ ஆயிரக்கணக்கான ராக்ஷஸிகள் இருக்கையில் சண்டைக்குக் கேட்கவா வேண்டும்? ராக்ஷஸிகள், 'நான்தான் சீதையை ராவணனிடம் சேர்ப்பேன்' என்லும், 'ராவணன்தான் ஜயிப்பான்' என்றும் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையிலே பெண்கள் சாரியிலே சலசலப்பு ஏற்பட்டது.

பெரிய வித்துவான்களுடைய கச்சேரியோ, அல்லது பாகவதர்களுடைய கதையோ நடந்தால் 4 மணி கச்சேரிக்கு 3 மணிக்கு ஜனசமுத்திரம் நிறைந்துவிடும். எங்கு பார்த்தாலும் ஒரே தலைமயம். ஆனால் ஒரு அம்மா மட்டும் சிறிது நேரங் கழித்துதான் வருவாள். அவள் வாங்கும் டிக்கெட் என்னவோ சாதாரணமானது தான். ஆனால் அவள் உட்காரும் இடமோ, ஸ்பெஷல் ரிஸர்வ்டில்தான்!

அன்றைக்கும் அந்த அம்மாள் வந்தாள். உட்கார்ந்திருப்பவர் அனைவரையும் மிதித்துத் தள்ளிக்கொண்டே, போனாள். உட்கார்ந்திருப்பவர்களும் பெண்களாதலால் பாகவதர் கூறியபடி சண்ட மண்டை உடைந்தது. கதை நின்றுவிட்டது. பாகவதர் இதைப் பார்த்து சிரித்துக்கொண்டே, திடீரென்று ''ஜானகி காந்த ஸ்மரணம்'' என்று கூவினார்.

சபையிலுள்ளோர் அனைவரும் வயிற்றெரிச்சல் தீர 'ஜே! ஜே! ராம்' என்று கத்தினார்கள். கூச்சல் சற்று அடங்கியது. அதற்குள் அந்த அம்மாள் எல்லோரையும் தள்ளிக்கொண்டு முந்தி வந்துவிட்டாள். அவள் வருவதற்கும் பாகவதர் மறுபடியும் கதையைத் தொடங்குவதற்கும் சரியாக இருந்தது.

''இப்படியாகத்தானே இலங்கையில் ராக்ஷஸிகள் சண்டையிட்டார்கள். இரண்டு கொண்டை இருந்தாலே சண்டையால் மண்டை இரண்டு. ஆயிரம் கொண்டைகள் இருக்கையில் எப்படி இருந்திருக்கும். அதற்கு இதுவே ஒரு ப்ரத்யக்ஷ ப்ரமாணம்'' என்று கூறினார்.

சபையில் சிரிப்பொலிக்கு கேட்கவா வேண்டும். ஓசை அடங்க 10 நிமிஷம் ஆயிற்று. அப்போது அந்த அம்மாவின் முகம் இருந்த லக்ஷணத்தை குறிப்பிட ஒரு வார்த்தை கூட அகப்படவில்லை.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

**ஜகன்மோகினி காரியாலயம்,**
26. தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

**வை. மு. கோ. நாவல்கள்**

ரூ. 4-8
வைதேகி (3 பாகம்)
ரூ. 4.
சந்திரனின் சிகரம்
ரூ. 3.
நிர்மலத்தோட்டை
ரூ. 2-8
மலர்ந்த இதழ்
மாணக்குயில்
மதுரகீதம்
ரூ. 2-4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
மாங்கல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
சதாஞ்சலி
புனிதபவனம்
ஞானக் குன்று

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய ஞாபகம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா 12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமணி
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
அணா 8.
உருத்த இதயம்
கான கரை
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை

வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

**வை. மு. ஸ்ரீ.**
உதய சூரியன் 1-8
பெண்மணிக்கனல் 1-8
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

**வை. மு. பத்மினி**
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

**சுத்தானந்த பாரதி**
காந்தி கீர்த்தனம் 3-8

**ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி**
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம உரை 1-0
அபூர்வ ராமாயணம் 1-8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.